நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI

புதிய பூமி

சுற்று 04 ஒக்டோபர் 1997 சுழற்சி 15 பக்கம்12 விலை ரூபா 10/=


## மனித முகத்தின் கீழ்

இலங்கையில் இயங்கி வரும் தென் கொரியக் கம்பனிகளின் எண்ணிக்கை 100 ஆகும். அவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 50,000 . இத் தொழிலாளர்களில் ஏகப் பெரும்பான்மையினர் இளம் யுவதிகளும் இளைஞர்களும் ஆவர். இவர்களின் சம்பளம் இரண்டாயிரம் அல்லது இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டுமே. தொழிலாளர்களை வாட்டி வதைப்பதில் கொரியக் கம்பனிகளே முதன்மை வகிக்கின்றன. தொழிலாளர்களாகத் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அதிகாரிகளாகச் சிலர் இருக்கிறார்கள். ஏற்றுமதியாக்கும் உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 400 மில்லியன் அமெரிக்க டொலராகும். மனித முகத்துடனான திறந்த பொருளாதாரம் வாழ்க?

# பேரினவாதப் பிசாசு!



*சிங்கள ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கை இலங்கையை அழிவுப் பாதையில் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு பேரினவாத ஆவணமாகும். நாட்டின் தமிழ் முஸ்லிம் மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து இன ஒடுக்குமுறையை மேலும் முனைப்புடன் முன்னெடுப்பதையே அவ் அறிக்கை வற்புறுத்துகின்றது. அத்துடன் ஏகப் பெரும்பான்மை சாதாரண சிங்கள மக்களின் நலன்களையோ அன்றி அபிலாஷைகளையோ எவ்வகையிலும் பிரதிபலிக்கவில்லை. ஆதலால் நிராகரித்து தூக்கி வீச வேண்டிய ஒன்றே சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையாகும்.*

இந்நாட்டில் வளர்ந்து வந்த இனவாதம் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையாகி கடந்த பதினான்கு ஆண்டுகளாக இரத்த ஆறு ஓட வழி வகுத்துக் கொண்டது. அதனால் உயிர் உடமைகள் இழந்து இடம் பெயர்ந்தவர்களாகி இன்றும் யுத்தக் கொடுமைகளின் கீழ் தமது வாழ்வை இழந்து தவிப்பவர்கள் தமிழ் முஸ்லீம் மக்கள் சிங்கள மக்களில் கணிசமானோரும் மேற்கூறிய துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர். நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டிய வளங்கள் அனைத்தும் இன்று யுத்தத்திற்காக கொட்டித் தீர்க்கப்படுகிறது. மாதா மாதம் கோடிக் கணக்கில் ஆயுதங்கள் - வெடி மருந்துக்கும் ஆயுதப் படைகளுக்கும் நீனியாக்கப்படுகிறது. தமிழ் மக்கள் -இளைஞர்கள் மட்டுமன்றி சாதாரண சிங்கள மக்களின் பிள்ளைகளான இளைஞர்கள் இராணுவ வீரர்கள் என்ற பெயரில் நாளாந்தம் கொல்லப்பட்டு வருகின்றனர். இத்தகைய யுத்தத்திற்கான காரணங்கள் பற்றியோ அதனால் நாடும் மக்களும் எதிர்நோக்கி நிற்கும் பன்முகப் பிரச்சினைகள் பற்றியோ இச் சிங்கள ஆணைக்குழு அக்கறை கொள்ளவில்லை.

ஆனால் மிகக் குறைந்தளவு கொண்டதும் திட்டவட்டமற்றதுமான ஒரு அரசியல் தீர்வு பற்றி முன் மொழியப் பட்டதன் காரணமாகவே சிங்கள ஆணைக் குழு ஒன்று தோற்றுவிக்கப் பட்டது. மிகச் சிறு அளவிலான சலுகைகளோ அன்றி உரிமைகளோ கூட ஏனைய இனங்களுக்கு வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதே அவ் ஆணைக்குழுவின் நோக்கமாக உள்ளது. இத்தகைய ஆணைக் குழு பற்றி அனைத்து மக்களுமே விழிப்பாக இருந்து கொள்வது அவசியமாகும்.

சிங்கள ஆணைக்குழுவை தோற்றுவித்தவர்களும் வழி நடத்தியவர்களும் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டவர்களும் சாதாரண சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் அல்லர். பௌத்த சிங்கள உயர் வர்க்கத்தினரில் கடைந்தெடுத்த பிற்போக்கு நிலைப்பாட்டர்களே யாவர். இவர்கள் இந்நாட்டின் மண் மீது பாதம் பதித்துக் கொள்ளாத மேட்டுக்குடியினர். அவர்களுக்கு சாதாரண சிங்கள மக்கள் பற்றி எதுவுமே தெரியாதவர்கள் நகரங்களில் தொழிலாளர்கள் தொட்டு கிராமங்களில் விவசாயிகள் வரை சிங்கள மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் வேலை இன்மை வறுமை பட்டினி நோய்கள் பற்றி அக்கறைப் படாதவர்கள். கடந்த பதின்நான்கு ஆண்டுகளில் எழுபதினாயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டனர். அவர்களில் பெரும்பான்மையினர் சிங்கள கிராமப்புற மக்களாவர். வறுமை வேலையின்மை மற்றும் சமூக நெருக்கடிகளால் விரக்தியுற்றே அவர்கள் தற்கொலைக்குத் தம்மைப் பலியாக்கினார்கள். இது பற்றி சிங்கள மக்களின் இரட்சகர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் சிங்கள ஆணைக்குழு அக்கறையோ அனுதாபமோ காட்டிக் கொள்ளவில்லை. தமிழ், முஸ்லிம் மலையக மக்களால் தான் சிங்கள மக்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறிந்த ஆணைக்குழு சிங்கள உயர்வர்க்க சக்திகளாலும் அவர்களது அரவணைப்புக்கு உள்ளான அந்நிய எசமானர்களாலும் இழைக்கப்பட்ட இன்றும் இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் பற்றி வாயே திறக்கவில்லை. இன்றும் பல்தேசிய கொம்பனிகளில் பல்லாயிரக் கணக்கான சிங்கள ஆண் பெண் தொழிலாளர்கள் வதைக்கப்பட்டு வேலை வாங்கப் படுவது பற்றியோ, வளம் மிக்க பல்லாயிரக் கணக்கான ஏக்கர்

தொடர்ச்சி பக்கம் 11இல்

## மாற்றமும் கணிப்பும்

இரண்டு வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள் என்றும் ஏனைய தமிழ் கட்சிகளும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றும் கூறிய அவர் இன்றோ தமிழ் மக்களுக்கென ஒரு பேச்சாளர் இல்லையென்றும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று எந்தவொரு கட்சியும் தமிழ் மக்களின் ஆணையைப் பெறவில்லை என்றும் கூறுகிறார். அவர்தான் ஜனாதிபதி சந்திரிகா. தமிழ் மக்களின் மீது ஒரு தீர்வு திட்டத்தை திணிக்க நினைப்பதால் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

## அமெரிக்காவின் தடை

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா தடைசெய்துள்ளதாக அறிவித்துள்ளது. அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் மெடலின் அல்பிரைட் அம்மையார் இதனை தெரிவித்துள்ளார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வேண்டுகோளுக்கு பின்னரே மேற்படி தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் கம்யூனிஸ்ட்

ஜப்பானில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு செல்வாக்கு அதிகரித்து வருகிறது. மக்கள் பிரதிநிதிகள் சபையில் 15 ஆகவிருந்த 'கம்யூனிஸ்ட்டுகளின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது. டோக்கியோ மாநகரசபை கம்யூனிஸ்ட்டுகளால் ஆளப்படுகிறது. அடுத்த தேர்தலில் பிரதிநிதிகள் சபையில் 100 க்கு மேற்பட்ட ஆசனங்களை கம்யூனிஸ்ட்டுகள் பெற்று அரசாங்கத்தை அமைக்கும் முக்கிய சக்தியாக திகழ்வார்கள் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

# மலையகத்தில் மாசடைந்த புகைமூட்டம்

நோர்வூட், பொகவந்தலாவை, மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் மூடுபனி போன்ற புகைமூட்டம் காணப்பட்டுள்ளது. அதனால் சுவாசிக்க முடியாது சிலர் கஸ்டப்பட்டுள்ளனர். சிலருக்கு கண் எரிச்சல் ஏற்பட்டுள்ளது. சுவாசிக்க கஸ்டப்பட்ட சிலரும், கண்களில் எரிச்சல் ஏற்பட்ட சிலரும் சிகிச்சை பெற வைத்திய சாலைக்கு சென்றிருந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நோர்வூட், பொகவந்தலாவை, மஸ்கெலியா பகுதிகளில் வானத்தில் பொன் மஞ்சள் நிறமான மேகக் கூட்டங்கள் இருந்ததை மக்கள் அவதானித்துள்ளனர். மூடுபனி அல்லது பனிமூட்டம் போன்று காணப்பட்ட புகை மூட்டம் மாசடைந்த நிறத்துடன் காணப்பட்டதாகவும், கண்களில் எரிச்சல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வார டைம்ஸ் சஞ்சிகை அறிக்கையின் படி மலேசியா தலைநகரான கோலாலம்பூரில் வானத்தில் பொன் மஞ்சள் நிறமான மேகக் கூட்டங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. அவை இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயினாலும், சூழல் மாசடைவதாலும் ஏற்பட்ட நச்சு புகைமூட்டம் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் ஏற்படும் காட்டுத் தீயினாலும் சூழல் மாசடைவதாலும் காற்றில் கலந்த நச்சு புகைமூட்டம் மலேசியா, சிங்கப்பூர், புரூனெ, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் கேடு இழைக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள நச்சுப் புகை தென்கிழக்காசியா முழுவதுமே பாதிப்பை ஏற்படுத்தும் என்று சர்வதேச சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் நோர்வூட், பொகவந்தலாவை, மஸ்கெலியா பகுதிகளில் ஏற்பட்ட புகைமூட்டத்திற்கும் இந்தோனேசியாவில் ஏற்பட்ட புகைமூட்டத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இலங்கை சூழல் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது. 'மேற்படி பகுதிகளில் அவதானிக்கப்பட்ட புகைமூட்டத்தினால், மக்களு

தொடர்ச்சி பக்கம் 11இல்

## அறிக்கையை ஆராய அமைச்சர் குழு

சிங்கள கமிஷன் அறிக்கை வரலாற்று குப்பை தொட்டிக்குள் வீசப்படும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். அவரின் கூற்று பிக்குமார் மத்தியிலும் பேரினவாதிகள் மத்தியிலும் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் அவ்வறிக்கையை ஆராய்ந்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென அமைச்சர்கள் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, தர்ம சிறிசேனாநாயக்க, எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோரை கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



## தடுக்க வேண்டிய கசிப்பு கலாச்சாரம்

நாட்டில் போதைப் பொருள் பாவனை என்றும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மோசமான போதை தரும் கசிப்புப் பாவனை நாளாந்தம் அதிகரித்து வருவதைக் காண முடிகிறது. அந்தந்த இடங்களிலேயே காய்ச்சி வடிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும் கசிப்பை தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அறிமுகம் செய்து மிகக் கிராக்கியுடன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குறைந்த பணத்தில் கூடிய போதை என்பதே கசிப்பின் இரகசியம். மலையகத்தில் ஏற்கனவே சில கி.மீ.தூரத்திற்கு ஒரு மதுபானக் கடைகள் சட்டப்படி இருந்து வருகின்றன. இவற்றுக்குரிய அனுமதிப் பத்திரத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்வது நடைமுறை. அவ்வாறு தம்மவர்களுக்கு மதுக் கடை திறக்க சிபார்சும் அனுமதியும் வழங்கி விட்டு குடியினால் தோட்டத் தொழிலாளர்கள் நாசமடைகிறார்கள் என அதே பாராளுமன்ற உறுப்பினர்கள் மேடைகளில் பெரும் பேச்சுப் பேசுவதும் வழக்கம்.

அத்தகைய மதுபானக் கடைகளில் விற்கும் மதுபானங்களை அதிக விலை கொடுத்து வாங்குவது தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த கஷ்டமாகும். இருப்பினும் சிலர் எதனை விற்றோ அல்லது உழைப்பதில் கூடிய பகுதியைக் கொடுத்தோ அம் மது பானக் கடைகளையும் மறந்து விடமாட்டார்கள். ஆனால் அதற்கும் அப்பால் குறைந்த பணத்தைக் கொடுத்து நல்ல 'கிக்' ஏறக் கூடிய பானமாக கசிப்பைக் குடித்து வரும் பழக்கம் அண்மைக் காலங்களில் அதிகரித்தே காணப்படுகிறது. வயது வந்த பெரியவர்கள் மட்டுமன்றி இளைஞர்கள் இத்தகைய கசிப்புக் குடிப்புக்கு ஆளாகி வரும் வேதனையை மலையகத்தில் பரவலாகக் காண முடிகிறது. வாழ்க்கை கஷ்டங்களை மறக்கவும் விரக்தி வேதனைகளைப் போக்கவும் இக்கசிப்பானது பலருக்கு கைகொடுத்து உதவுவதாகவும் கூறப்படுகிறது. இக் கசிப்புப் பாவனையால் விரைவிலேயே கடும் நோய்களுக்கு உள்ளாகி இறந்து கொள்ளும் நிலையே காணப்படுகிறது. பல குடும்பங்கள் இதனால் நிர்க்கதியாகி எதிர்காலமே இருள் சூழ்ந்ததாகியுள்ளன. கசிப்பு பாவனையாளனது, ஒவ்வொரு தனி மனிதனையும் அவனது குடும்பத்தையும் சுற்றம் சூழலையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பல தோட்டங்களில் நாளாந்தம் காண முடிகிறது. இன்றைய தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உணவிற்கே போதியனவாக இல்லை. கல்விக்கும் ஏனைய தேவைகட்கும் கடனும் கையேந்தி நிற்பதுமாகவே உள்ளன. இந் நிலையில் கசிப்பு மது போன்ற பாவனையால் அரைகுறை உணவையும் இழந்து சின்னம் சிறியதுகள் உட்பட குடும்பமே பட்டினி நிலையில் தான். அவை மட்டுமன்றி குடும்பச் சச்சரவுகள் அடிபிடிகள் அயலார் அற்ற சூழலுடன் முரண்படுதல் போன்ற யாவற்றுக்கும் இக் கசிப்புப் பாவனை வழி வகுக்கின்றது. அத்துடன் வாழ்வுக் காலத்தை மிக விரைவாகக் குறுக்கிக் கொள்ளவும் கசிப்பு காரணமாகி உள்ளது.

ஆதலால் மலையகத்தில் பரவி நிற்கும் கசிப்புக் கலாசாரத்திற்கு எதிரான விழிப்புணர்வையும் அறிவுறுத்தல்களையும் மேற்கொள்வது அவசியமாகும். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் கசிப்புக் கலாசாரம் பரவுவதைத் தடுக்க பலமுனை முயற்சிகள் செய்யப்படுவது அவசியம்.


## மூடு விழாவை நோக்கி இராணிவத்தை தமிழ் வித்தியாலயம்

சீடா செயற் திட்டத்தின்படி பெருமளவான நிதியை ஒதுக்கி பெரும் தோட்ட பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்களை அமைத்து கொடுத்து வருவதை யாவரும் அறிந்ததே. இதன் அடிப்படையில் பெரிய இராணிவத்தை தோட்டத்தில் கல்விபயிலும் சுமார் 300 க்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு அங்கு ஒரு புதிய கட்டிடத்தை கட்டி கொடுக்க மேற்சொன்ன செயற்திட்டம் முன் வந்தது. ஆனால் இப்புதிய கட்டிடத்துக்காக அத்திவாரம் இட்ட நிலையிலேயே சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக இருக்கின்றது. இதனுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவை எதிர் கொண்டு காத்திருக்கின்றன.

இப்பாடசாலை தொடர்ந்து கட்டி முடிக்காவிட்டால் அருகில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களை பதிவு செய்து விட்டு இப்பாடசாலை மூடப்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இதற்கு புதிய கல்விக் கொள்கையும் சாதகமாக அமைகின்றன. இக்கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு சீடா செயற்திட்ட அதிகாரிகளோ அல்லது இப்பாடசாலையின் அதிபரோ இவ்விடயத்தில் எவ்வித அக்கறையும் எடுப்பதாக தெரியவில்லை. இக்கட்டிடத்தை கட்டுவதற்கு வந்த பெருமளவிலான கட்டிட பொருட்கள் களவாடப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது. அத்தோடு இப்பாடசாலையின் அதிபர் இச்சந்தர்ப்பத்தில் இடமாற்றத்துக்கு முயற்சி செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

இப்பாடசாலை கட்டப்படாவிட்டால் இதற்காக பிடுங்கப்பட்ட தேயிலையினாலும், மைதானத்துக்காக மூடப்பட்ட கள்ளு தவறணையின்னாலும் ஏற்பட்ட நட்டத்தை இத்தோட்ட தொழிலாளிகளின் சம்பளத்தில் அறவிடப் போவதாக தோட்ட முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடசாலையில் பெரிய இராணிவத்தை, சின்ன இராணிவத்தை தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளான சுமார் 300 க்கு மேற்பட்ட மாணவர்கள் பிரித்தானியரின் காலத்தில் கட்டப்பட்ட ஒரு பழைய கட்டிடத்திலேயே கல்வி பயின்று வருகின்றனர். ஆண்டு ஐந்து வரை கொண்டுள்ள இப்பாடசாலையில் ஐந்து ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இக்கட்டிடத்தை பூரணமாக கட்டி முடித்து இத்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி நிலையின் மேம்பாட்டுக்காக உதவும்மாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டு கொள்கின்றோம்.



### நச்சுச் சாராயமும் ஜலண்டின் நஞ்சும்

மட்டக்களப்பில் மீதைல் அற்கஹோல் சேர்ந்த சாராயம் அருந்தி 50 பேர் மட்டில் மரித்து நூற்றுக் கணக்கானோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டதற்கு கலப்பட வியாபாரிகளே பொறுப்பு என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆயினும் ஜலன்ட் ஏட்டுக்கு அது விடுதலைப் புலிகள் செய்தது என்பதில் கடுகளவு சந்தேகமும் இல்லை. 3/9/97 ஜலண்டில் கொட்டையெழுத்தில் தலைப்புத் தரப்பட்ட இந்த ஊகத்திற்கு எதுவித ஆதாரமும் தரப்படவில்லை. பின்பு வெளியான தகவல்கள் இந்த விபரீதத்தின் பொறுப்பு பல இடங்களிற் போலக் கலப்படத்தின் மூலம் கொள்ளை லாபமடிப்பவர்களினது என்பதை உறுதி செய்துள்ளது. சாராய விஷயத்தை விடக் கொடி ஜலண்டின் இனவாத விஷம் இந்த நாட்டில் எத்தனை கொலை பாதகச் செயல்களை ஊக்குவித்து வருகிறது?

இளவரசி டயானாவின் மரணம் பற்றிப் பத்திரிகையாளர்களின் பொறுப்பீனத்தைக் காய்கிறவர்கள், இந்த இனவாதக் கொலை பாதகப் பத்திரிகையாளர்கள் பற்றி என்ன சொல்கிறார்கள்?

### மூன்றே மாதங்களில் முடித்துத் தருவோர்கள்.

I இன்னும் மூன்று மாதத்திற்குள் யுத்த நிறுத்தமும் அதிகாரப் பகிர்வும் கொண்டுவரப்படாவிட்டால் பதவியில் தொடர மாட்டேன் என்று இம்மாதம் சூளுரைத்துள்ளார். திருகோணமலையின் புதிய த.வி.கூட்டணி பா.உ.சம்பந்தன் ஐயா அவர்கள்.

II போனமாதம் சந்திரிகா அம்மையார் மூன்று மாதத்தில் தமிழ் மொழியில் அரசு அலுவல்களை நடத்துவதற்குத் தவணை கொடுத்துள்ளதாக அறிக்கை விட்டார்.

III இன்றைய அரசியலில் மூன்று மாதங்கள் என்பது மிக அதிகம். மூன்றே நாட்கள் என்று தவணை கொடுத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். எப்படியும், தவணை தாண்டியும் எதுவும் நடக்காது என்பது எல்லாருக்கும் தெரிந்தது தானே.

### ஏரிக்கரைக் கயிறு திரிப்பு

செய்தித் திரிப்பில் ஏரிக்கரை ஏடுகள் கைதேர்ந்தவை. விடுதலைப் புலிகளில் உள்ள கிழக்குப் பகுதி போராளிகள் வட பகுதியினர் மீது மனக்கசப்புடையோராக இருப்பது ஒகஸ்ற் இறுதியில் வந்த டெய்லி நியூஸில் கூறப்பட்டுள்ளது. அரச படைகள் புளியங்குளத்தைப் பிடிப்பதற்குத் திணறும் போது இப்படியான கதைகள் வருவது இயல்பு தான். இளவரசி டயானாவின் மரணம் ஐயசிகுறு செய்திகள் சொல்ல அவசியமில்லாத படி ஒரு வாரத்துக்குப் பக்கங்களை அடைத்துக் கொள்வதால் டெய்லி நியூஸ் ஆசிரியர் நிம்மதிப் பெருமூச்சு விடலாம். ஆயினும், இலங்கை மக்கள் எல்லாரும் ஓரினம் என்று பிரசாரம் செய்கிற ஏடு வடக்கு கிழக்கு என்று தமிழ் மக்களைப் பிளவுபடுத்த முயல்கிறது ஏன்?

### உயர்வும் பணிவும்

ஈரானின் புதிய ஆட்சித் தலைவரான கதாமி சகல ஆடம்பரங்களையும் நிராகரித்து மிகவும் எளிமையாக நடந்து வருவதாகக் கூறப்படுகிறது.

தொலைக்காட்சியில் தன்னை அதிகம் காட்டுவதைத் தடை செய்துள்ள அவர் பொது மேடைகளிலும் வைபவங்களிலும் பாராளுமன்றத்திலும் புகழாரங்களாலும் அடைமொழிகளாலும் தன்னை அழைப்பதை நிறுத்துமாறு நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆளுக்கு ஆள் பட்டம் சூட்டி அகமகிழும் நமது கலை, கல்வி, அரசியல் மன்னர்கள் அவரிடமிருந்து கற்க ஏதாவது இருக்கிறதா?

## தொழிலாளர் மீது பொலிஸ் அடாவடித்தனம்

கொழும்பு மட்டக்குளியில் அமைந்திருப்பது யூரோ ஏசியா ஆடைத் தொழிற்சாலை. இருநூற்றி முப்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள். அவர்களில் பெரும்பகுதியினர் பெண்கள். அவர்களில் யுவதிகளே அதிகம். கடந்த மாதப் பிற்பகுதியில் தொழிற்சாலை நிர்வாகத்திடம் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்து கிடைக்காத நிலையில் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். 750 ரூபா சம்பள உயர்வு (ஏற்கனவே வழங்கப்படுவது இரண்டாயிரத்திற்குட்பட்டதேயாகும்) உடை மாற்றிக் கொள்ளும் நிலையம், போதிய மலசல கூட வசதி, சுகாதாரமான உணவுச்சாலை, தொழிலாளர்களை நிர்வாகம் கண்ணியமாக நடத்துதல் வேண்டும் போன்ற நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனைப் பொறுக்க முடியாத நிர்வாகம் செப்டம்பர் மாதம் 2 ம் திகதி பகல் பன்னிரண்டு மணியளவில் தனது பாதுகாவலர்களான பொலீசைத் தொழிலாளர்கள் மீது ஏவி விட்டது. நூற்றுக்கு மேற்பட்ட பொலீஸ் படை தமது பொறுப்பதிகாரிகளின் தலைமையில் தொழிலாளர்களைத் தாக்கி படுகாயங்களை விளைவித்தது. பெண் பொலிஸார் யுவதிகளான தொழிலாளர்களின் தலை மயிரில் பிடித்து இழுத்துத் தாக்கியதுடன் அவர்களது சட்டைகளையும் கிழித்து வீதியில் விரட்டி ஓடஓட அடித்துக் கொண்டனர். இதனால் ஏழு தொழிலாளர்கள் வரை கடுமையான காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இத்தொழிற்சாலை ஜெர்மனியருக்குச் சொந்தமானது. இதன் நிர்வாக உயர் அதிகாரி ஒரு தமிழர். களத்தில் நின்று தொழிலாளர்களைத் தாக்கியவர்கள் சிங்கள பொலீஸார். தாக்கப்பட்டவர்கள் சிங்கள தமிழ் முஸ்லீம் தொழிலாளர்கள் மட்டுமன்றி அவர்களுக்கு ஆதரவு கொடுத்த அப்பகுதி மக்களுமாவர்.

மேற்படி தொழிலாளர்கள் மீது இழைக்கப்பட்ட பொலீஸ் அடாவடித்தனத்தை எதிர்த்தும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து கடந்த 12-09-97 ல் முகத்துவாரம் சமகிபுர 192ம் இல.தோட்டத்தில் பெருந்த கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் ஒழுங்கு செய்த இவ் எதிர்ப்புக் கூட்டத்தில் தொழிலாளர்கள் ஊர் மக்கள் மற்றும் அனுதாபம் தெரிவிப்போர் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். மழையையும் பொருட்படுத்தாது ஆயிரத்திற்கு மேல் கூடியிருந்த மேற்படி கூட்டத்தில் நவசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் விக்கிரபாகு கருணாரட்ணா, பாராளுமன்ற உறுப்பினர் தோழர் வாசுதேவ நாணயக்கார, புதிய - ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல், தொழிலாளர் மாக்சிசப் போக்கின் தலைவர் தோழர் சிறிதுங்கா, ஐக்கிய தொழிலாளர் சம்மேளனச் செயலாளர் தோழர் லீனஸ் ஐயத்திலகா உட்பட தொழிற்சங்க பிரதிநிதிகள் பலரும் உரையாற்றினர். எல்லோரும் தமது வன்மையான கண்டனத்தையும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் பற்றியும் வற்புறுத்தினர்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844


## கடுமையான தண்டனை வேண்டும்

பாலியல் வல்லுறவு புரிந்தவர்களை குற்றவாளிகளாக கண்டு தண்டனை வழங்க சட்டம் இருக்கின்றது. பாலியல் வல்லுறவை நிருபிக்க நடைமுறையில் அதிகபட்ச சான்றுகளும் பொறுப்புகளும் தேவைப்படுவதால் அந்த சட்டத்தின் பிடியிலிருந்து குற்றவாளிகள் இலகுவாகவே தப்பிவிடுகின்றனர்.

ஏனைய குற்றங்களைப் போன்று பாலியல் வல்லுறவும் சாட்சியங்களை கொண்டு சந்தேகத்துக்கு அப்பால் நிருபிக்க வேண்டும். பெண்ணின் சம்பந்தமில்லாமல் பலாத்காரமாக உடலுறவு கொள்ளப்பட்டதாக நிருபிக்க வேண்டும். பாலியல் வல்லுறவால் பாதிக்கப்பட்ட பெண்ணின் சார்பில் பொலிஸார் அல்லது சட்டமா அதிபர் சமர்ப்பிக்கும் சாட்சியங்களில் நியாயமான சந்தேகம் அல்லது சந்தேகங்கள் எழுப்பப்படுமாயின் பாலியல் வல்லுறவு புரியப்பட்டதாக நிருபிக்கப்பட்டதாகாது.

பணம் செல்வாக்கு அந்தஸ்து என்பவற்றின் அழுத்தங்களினாலும் அச்சுறுத்தல்களினாலும் குற்றவியல் வழக்குகளில் சாட்சியங்கள் சாகடிக்கப்படுவது சாதாரணமாகன நிகழ்வாகும். அதைவிட பலவிதமான சமூகவியல் காரணங்களினாலும் பாலியல் வல்லுறவுக் குட்பட்ட பெண்ணால் சாட்சியங்களை சரிவர சமர்பிக்க முடிவதில்லை. பெண் என்பதனால் மேலதிகமான இந்த அவலத்திற்கும் ஆளாக வேண்டியிருக்கிறது.

பாலியல் வல்லுறவால் பாதிக்கப்பட்ட பெண் உடல்ரீதியாக மட்டுமன்றி சமூகரீதியாகவும் பாதிக்கப்படுகிறாள்; பாதிக்கப்பட்ட பெண் குடும்ப நிறுவனத்தில் மட்டுமன்றி சமூகத்தின் அங்கத்தினராகவும் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படுகிறாள்.

பாலியல் வல்லுறவை நிருபிப்பது மட்டுமன்றி நிருபித்தால் சமூகத்தில் வாழ்வதும் கஸ்டமாகவே இருக்கிறது. பாலியல் வல்லுறவு குற்றத்தைப் புரிந்தவர்களுக்கு விதிக்கப்படும் சிறைத்தண்டனையும் உயர்ந்த பட்சமானதாக இல்லை. பாதிக்கப்பட்ட பெண் நட்டஈட்டைப் பெற வேண்டுமானால் சிவில் நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கை தொடுக்க வேண்டியவளாக இருக்கிறாள்.

எமது சட்டம் 150 வருடங்களுக்கு முற்பட்ட சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, பிரிட்டிஷ் வழமைகளையும், சட்டங்களையும் பின்பற்றி இயற்றப்பட்டதாகும்.

இன்றைய சூழ்நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். நிதமும் பாலியல் வல்லுறவு பற்றிய செய்திகள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. வடக்கு கிழக்கில் பாதுகாப்பு படையினரால் தமிழ் பெண்கள் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். எல்லைக்கிராமங்களிலும் சிங்கள, முஸ்லிம் பெண்களும், சிறுமிகளும் பாதுகாப்பு படையினரின் பாலியல் பலாத்காரங்களுக்கு பழியாகி வருகின்றனர். யுத்தம் நடைபெறாத ஏனைய பகுதிகளிலும் பாலியல் வன்முறைகள் பலவிதமாக நடைபெறுகின்றன.

பாலியல் வல்லுறவு (கற்பழிப்பு) பாலியல் சேஸ்டைகள், பலாத்கார தன்னினச்சேர்க்கை என்பன பாலியல் குற்றங்களாகும் என்று இலங்கை தண்டனைக் கோவை கூறுகிறது. புதிய சூழ்நிலைகளின் கீழ் அக்குற்றங்களின் வரைவிலக்கணங்கள் நெகிழ்வாக்கப்பட வேண்டும். அவற்றை நிரூபிக்கும் முறைகளும் நெகிழ்வாக்கப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு உயர்ந்தபட்ச தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அதிகபட்ச நட்டாடும் வழங்கப்பட வேண்டும். சந்தேக நபர்களை பிணையில் விடுவதற்கான பிரமாணங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பாலியல் வன்முறைகளுக்கு எதிரான சமூக ஒழுக்கத்தையும், பொறுப்பையும் கட்டி வளர்க்க வேண்டும். அது இன்றைய சமூக அமைப்பிற்குள் சாத்தியமானதா? என்பதே சிந்திக்கப்படல் வேண்டும்.

ஆசிரியர் குழு

## முன்வைத்த காலை பின்வைக்கக் கூடாது!

சிங்கள கமிஷன் அறிக்கை வெகு விரைவில் வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் போடப்படுமென்றும், அது சிங்கள மக்களுக்கு எதிரான சதியென்றும் தகவல், தொலை தொடர்பு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான மங்கள சமரவீர பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் காணி அமைச்சருமான டி.எம்.ஜயரட்ன சிங்கள கமிஷனின் அறிக்கை வெளியிடும் வைபவத்தில் கலந்து கொண்டுள்ளனர். யூ.என்.பி.யின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர். அவ்வறிக்கை பற்றிய அரசாங்க நிலைப்பாட்டை யூ.என்.பி. கேட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் அமைச்சர் மங்கள சமரவீரவின் மேற்குறிப்பிட்ட கருத்து அதிதீவிர சிங்கள பேரினவாதிகளை மட்டுமன்றி சிங்கள கமிஷனுக்கு ஆதரவானவர்களையும், யூ.என்.பியையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள சில எம்.பிக்களையும் கூட அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சிங்கள கமிஷன் அறிக்கை பற்றி அரசாங்கம் ஒரு 'மெதுவான போக்கையே கடைப்பிடிக்கும்' என்று எதிர்பார்த்தவர்களுக்கு அமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்து பலத்த அடியை கொடுத்துள்ளது.

இனப்பிரச்சினைகளுக்கு 'நியாயமான அரசியல் தீர்வு' காண வேண்டுமென்பதில் முற்போக்கான பாத்திரத்தை வகிக்காவிட்டாலும் அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கலுக்கு (முழுமையான விபரம் தெரியாத அதிகாரப் பரவலாக்கலுக்கு) ஆதரவான நிலைப்பாட்டை அமைச்சர் ஸ்திரப்படுத்தி வருகிறார். சமாதானத்துக்கான போர், வெண்தாமரை இயக்கம் போன்றவற்றில் அவரது பங்குபற்றலை எல்லோரும் அறிவார்கள்.

சிங்கள கமிஷன் அறிக்கை பற்றி மங்கள வீரவினால் வெளிப்படுத்தப்பட்ட நிலைப்பாடு மாற்றமடையாத ஒன்றாக இருக்கும் என்று நம்பிவிடத் தேவை இல்லை. எனினும் அரசியல் தீர்வு முயற்சிகள் பற்றி அரசாங்கம் பேசிவருகின்ற இவ்வேளையில் சிங்கள கமிஷன் அறிக்கை சமாதானத்திற்கு. எதிரானதாக கொள்ளப்பட வேண்டும்.

மறுபக்கத்தில் சிங்களக் கமிஷன் அறிக்கை அதிதீவிரவாத சிங்கள பேரினவாதிகளுக்கு உரிய தீனியாக அமையவில்லை என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் அவ்வறிக்கை நாட்டில் இனப்பிரச்சினை இருப்பதை மறுக்கவில்லை என்றும் 13 வது திருத்தச் சட்டத்திற்கு மேலதிகமான அதிகாரப் பரவலாக்கலையே அது எதிர்க்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் சிங்களக் கமிஷன் அறிக்கை வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் போடப்படும்' என்ற மங்கள சமரவீரவின் கூற்று வாபஸ் பெறப்பட வேண்டும் என்று கோரி சிங்கள இனவாதிகளும், சில பிக்குமார்களும் ஆர்ப்பாட்டங்களை செய்யத் தொடங்கி விட்டார்கள். இவ்வாறான நடவடிக்கைகளாலேயே பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதன் வரலாற்று விளைவை இன்று நாட்டு மக்கள் மிகவும் வேதனையுடன் முகம் கொடுத்து வருகின்றனர்.



சிங்கள இனவாதிகளும், சில பிக்குமாரும் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் யூ.என்.பி., ஜே.வி.பி போன்ற கட்சிகள் அரசியல் லாபமடைய முயற்சிக்கின்றன.

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான யூ.என்.பி.யின் நடவடிக்கைகளுக்கு எதிராக பாராளுமன்றத்துக்குள்ளிருக்கும் இடதுசாரிகள் அவர்களின் சக்திக்கு ஏற்ப இயக்கங்களை நடத்தி வருகின்றனர் அவ்வாறான நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு வெளியிலுள்ள இடதுசாரிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

பேரினவாதத்திற்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணியின் கறாரற்ற நிலைப்பாடே சிங்கள கமிஷன் அறிக்கையை வெளிக்கொணர வழிசெய்தது. இவ்வாறான பேரினவாத போக்குகள் வளர அரசாங்கத்தின் 'சமாதானத்துக்கான போர்' நடவடிக்கைகள் அடிப்படையாக அமைந்தன. அரசாங்கங்களின் இருப்புக்காக பேரினவாதத்திற்கு வளைந்து கொடுப்பதானது பின்னர் அவற்றின் இருப்புக்கே ஆபத்தாகின்றது என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றின் பல முறைகள் நிருபிக்கப்பட்டு விட்டன.

அந்த வகையில் இதுவரை வளைந்து கொடுத்தது போன்று அரசாங்கம் இனியும் பேரினவாதத்திற்கு வளைந்து கொடுப்பதோ, பேரினவாத அடிச்சுவடுகளை பின்பற்றுவதோ அதன் இருப்புக்கு ஆபத்தாக அமையும் என்பதை உணர வேண்டும்.

பேரினவாதத்திற்கு வளைந்து கொடுப்பதாக எண்ணி அரசியல் தீர்வு நடவடிக்கைகளை கைவிடுவதோ அல்லது தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத நியாயமற்ற தீர்வை தமிழ் மக்கள் மீது திணிப்பதோ நாட்டை தொடர்ந்து அழிவுக்கு இட்டுச் செல்வதுடன் இறுதியில் அரசாங்கத்தின் இருப்பையும் ஆபத்துக்குட்படுத்துவதாகவே அமையும்.

எனவே சிங்களக் கமிஷன் அறிக்கைக்கு எதிராக அரசாங்கம் முன்வைத்துள்ள கருத்தை வாபஸ் பெறாமல் பேரினவாதத்திற்கு எதிராக முன்வைத்த காலை பின்வைக்கக்கூடாது.

அவ்வாறு முன்வைத்த காலை பின்வைக்காமல் பேரினவாதத்தை தோற்கடிக்க வேண்டுமானால் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி விடுதலை புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## உயிர்களை கொல்ல பிள்ளையாரின் ஆசீர்வாதம்!

'கணபதி தெய்யோ கே ஆசீர்வாதய்' என்று பூசகர் காலில் வீழ்ந்து வணங்கிய இளைஞனை பார்த்து, கூறிவிட்டு, அவனது நெற்றியில் விபூதியை பூசினார் பூசகர்.

அவனுக்கு பெயர் சிறிசேன. அவனது பெற்றோர்கள் அந்த கோவிலுக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். அவர்களின் தோற்றம் அவர்களை மிகவும் பிற்பட்ட கிராமத்தை சேர்த்த வறியவர்கள் என்பதை எடுத்துக் காட்டியிருந்தது.

அவ்வேளை காலை 10.மணி. காலை பூஜை முடிந்திருந்தது. கோயில் வளவுக்குள் இருக்கும் பூசகரின் வீட்டிற்கு வந்து வெற்றிலையில் 10 ரூபா வைத்து பூசகரிடம் கொடுத்தனர். பூசகர் பெயர் (நம) என்றார். சிறிசேன என்றான் இளைஞன். வீட்டிற்குள் சென்று வந்த பூசகர் 'கணபதி தெய்யோ கே ஆசீர்வாதய்' என்றார்.

பெற்றோர்கள் கேட்டுக் கொண்டபடி பூசகரின் காலில் விழுந்து வணங்கினான் சிறிசேன. எழுந்த அவனது நெற்றியில் விபூதியை பூசினார் பூசகர்.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் 'கல்கமுவை தலையாட்டிப் பிள்ளையார் கோவிலில்' மேற்படி சம்பவத்தை நேரடியாக என்னால் பார்க்க முடிந்தது.

இளைஞன் இராணுவ படையில் சேர்ந்து தாக்குதலுக்காக வடக்கு நோக்கிப் போகிறான். யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட பூசகர் அவனை ஆசீர்வதித்து அனுப்புகிறார்.

அந்தப் பகுதியை சேர்ந்த இளைஞர்கள் இராணுவ சேவைக்கு போவதற்கு முன்பு அக்கோவிலுக்கு வந்து வணங்கிவிட்டுப் போவது

தொடர்ச்சி பக்கம் 11இல்

நன்றி - நூலகத்திட்டம்

# இன்னும் இந்தியர்கள் அல்லர்

## இளங்கதிர் (1992)

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடான இளங்கதிரில் (1992) 'இலங்கைவாழ் மலையகத் தமிழர் தனியானதொரு தேசிய சிறுபான்மையினர்' என்ற தலைப்பில் கலாநிதி அம்பலவாணர் சிவராஜா இலங்கை வாழ் முழு இந்திய வம்சாவளி மக்களையும் மலையகத் தமிழ் மக்கள் என்றே அடையாளப்படுத்துகிறார்.



## 'இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும்' (1993 செப்டெம்பர்)

மேற்படி நூலில் மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத் தளம்' என்ற தலைப்பில் பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதியுள்ள ஆய்வு முன்னுரையில்

''இலங்கைத் தமிழ் வழக்கில் இன்று மலையகம் எனும் தொடர் மலைப்பிரதேசங்களிலுள்ள பெருந்தோட்டங்களிலும் அவற்றை சார்ந்த நகரங்களிலும் வாழும் இந்திய வம்சாவளித் தமிழரை குறிப்பதாகும். மலையகப் பகுதிகளை சாராத பகுதிகளிலுள்ள பெருந்தோட்டங்களில் வாழ்பவர்களையும் மலைசார் பகுதிகளிலிருந்து சென்று வடகிழக்கு பகுதியின் விவசாயப் பிரதேசங்களிலும் (கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலே) கொழும்பிலும் வாழ்பவர்களை கூட 'மலையகத் தமிழர்' என்ற தொடர் கொண்டே சுட்டும் மரபு இன்று வழக்கிலுள்ளது''

(பக்கம் 11)

## இமய வரம்பன் எழுதிய சுயநிர்ணய உரிமையில் முஸ்லீம்கள் மலையக மக்கள் (1994)

''மலையகத் தமிழர்' என்ற சொற்றொடர் எவ்வாறு வழக்கத்துக்கு வந்தது என்பதை நாம் மறந்து விடுவதால் மலையகத்தில் வாழ்வோரை மட்டுமே இது குறிக்கிறது என்று எண்ண நேருகிறது. பிரித்தானியர் ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து வந்த மக்கள் அனைவரையும் இந்தியர் என்று அடையாளம் காட்டும் வழமை இருந்தது. இந்தியத் தமிழர், இந்தியச் சோனகர் போன்ற சொற்றொடர்களால் மலையகத்திலும், பிற பகுதிகளிலும் கூலி உழைப்புக்காக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மக்களும் அவர்களின் வரவையொட்டி இங்கு வந்த பிறகும் அழைக்கப்பட்டனர். 'இந்திய' என்ற அடைமொழி அவர்களை அந்நியராகவே அடையாளங் காட்டியமையால், அவர்கட்கு இலங்கை மண்ணில் உள்ள உரிமையை வலியுறுத்தும் நோக்கிலேயே அவர்களை மலையகத் தமிழர் என அழைக்கும் வழக்கம் உண்டாயிற்று.''

(பக்கம் 52, 53)

## இந்தியவம்சாவளி தமிழர்கள் மலையக(த்தமிழ்) மக்கள் எனும் தேசிய இனம்

மலையகத்தில் மட்டுமன்றி ஏனைய எல்லா இடங்களிலும் வாழும் இந்தியவம்சாவளி தமிழர்களை மலையக(தமிழ்) மக்கள் என்றே அழைக்க வேண்டும் என்ற எண்ணக்கரு வளர்ச்சியடைந்துள்ளது. மலையகத் தமிழ் மக்கள் என்பதும் மலையக மக்கள் என்பதும் ஒரே அர்த்தத்தை தருவதாகவே கொள்ளப்படுவதால் அவற்றினிடையே வேறுபாட்டை காண்பதற்கான அவசியம் எழவில்லை. இங்கு காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள் யாவும் நாடெங்கும் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் எல்லோரையும் மலையக(தமிழ்) மக்கள் என்றே அழைக்க வேண்டும் என்பதனையே வேண்டிநிற்கின்றன.

அதேவேளை இலங்கை மக்களிலிருந்து அந்நியப்படுத்தும் 'இந்தியர்' என்ற அடைமொழியுடன் இந்தியவம்சாவளி தமிழர் என்று அழைக்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர். மலையகத்தில் வாழ்வோரை மலையகத் தமிழர் என்றும் ஏனைய இடங்களில் வாழ்வோரை இந்தியவம்சாளி தமிழர் என்றும் அமைக்க வேண்டும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

'இந்தியர்' என்ற அடைமொழி வேற்று நாட்டவர் என்பதனை வெளிப்படுத்துவதால் அதனை 1950 ஆம் ஆண்டுகளிலேயே இலங்கை இந்தியவம்சாவளியினர் வெறுத்தனர். பின்னர் மலையகத்தில் வசிக்கும் தொழிலாளர்கள் உட்பட எல்லா இந்தியவம்சாவளி தமிழரையும் மலையக மக்கள் அல்லது மலையக தமிழர் என்று அழைக்கும் வழக்கம் ஸ்தாபிதமாகியுள்ளது.

எனவே இன்று இலங்கையின் ஒரு தேசிய இனமாக வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் மலையகத்திலுள்ளோரை உள்ளடக்கிய மக்களை மீண்டும் 'இந்தியர்' என்ற அடைமொழியுடன் அழைப்பது காலத்துக்கு ஒவ்வாததாகும்.

அதேவேளை மலையகத்தில் வாழ்வோரை உள்ளடக்கிய எல்லா இந்தியவம்சாவளியினரையும் ஒரு பொது அடையாளத்துடன் அழைக்க வேண்டிய, ஒரு சமூகமாக அடையாளம் காண வேண்டிய வரலாற்றுத் தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது. இலங்கையின் தேசிய இனங்களுடைய இன உரிமைகள் முக்கியமடைந்துள்ள இக்காலகட்டத்தில் முழு இந்தியவம்சாவளி தமிழரையும் ஒரு தேசிய இனமாக ஒரே பெயரில் அழைக்க வேண்டிய தேவை உணரப்படுகிறது.

ஒரே பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்பதால் நிராகரிக்கப்பட்ட 'இந்தியர்' என்ற அடைமொழியை மீண்டும் கொண்டுவருவது மேலும் இந்திய வம்சாவளி மக்களை தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியப்படுத்துவதாகவே அமையும். அதேவேளை பெரும்பான்மையாக மலைநாட்டில் வாழும் இந்தியவம்சாளி தமிழ் மக்களை மலையகத் தமிழ் மக்கள் என்று ஏறக்குறைய அரைநூற்றாண்டாக அழைக்கப்பட்டு வருவதால் அவர்களுக்கு புதுப்பெயர் ஒன்றை தேடவேண்டிய அவசியமும் இல்லை.

இலங்கை வாழ் சகல இந்தியவம்சாவளி தமிழ் மக்களும் ஒரே தேசிய இனமாக அடையாளம் காணப்பட்டு ஒரே பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்பதால் அவர்களில் பெரும்பான்மையினர் இதுவரை அழைக்கப்பட்டு வந்தவாறு மலையகத் தமிழ் மக்கள் என்றே அழைக்கப்படலாம்.

பிறப்புச் சான்றிதழ் உட்பட எல்லா அரசாங்க அறிக்கைகளிலும் இந்தியத் தமிழர்கள் என்று அறிக்கை செய்யப்பட்டிருந்தாலும் இச் சமூகத்தின் பெரும்பான்மையானோர் தம்மைத் தாமே மலையக தமிழ் மக்கள் என்று கடந்த அரைநூற்றாண்டிற்கு மேல் அழைத்து வந்துள்ளனர். ஒரு சில வைதீக இடதுசாரிகளை தவிர அதிகமான இடதுசாரிகளும், 'கந்துரட்ட தெமழ ஜனத்தாவ' (மலையக தமிழ்மக்கள் அல்லது மலைநாட்டு தமிழ்மக்கள்) என்று அழைப்பதை தற்போது வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத் தமிழ் மக்கள் வர்க்கரீதியாகவும், இனரீதியாகவும் அடக்கி வருகின்ற, பாரபட்சங்களை காட்டி வருகின்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐ.தே.கட்சி என்பவை தோட்டத் தமிழர் என்றும், இந்தியவம்சாவளி தமிழர் என்றும் அழைக்கின்றன என்பதற்காகவும், அவற்றின் அரசாங்க அறிக்கைகள் இந்திய வம்சாவளி தமிழர் என்று குறிப்பிடுகின்றன என்பதாலும் இந்தியவம்சாவளி தமிழ் மக்கள் ஒரே பெயரில் மலையகத் தமிழ்மக்கள் என்று அழைக்கப்பட்டு ஒரே தேசிய இனமாக அடையாளம் காணப்படுவதை நிராகரிக்க முடியாது.

## இ.தம்பையா எழுதிய மலையக மக்கள் என்போர் யார்?

1995 யூன்

''..... எனவே மலையக மக்கள் என் பதில் பின்வருவோர் உள்ளடக்கப்படலாம்.

1. மலையகத்திற் நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு அங்கேயே வாழும் தோட்டத் தொழிலாளர்களை உள்ளடக்கிய சகல இந்திய வம்சாவளி மக்களும்
2. மலையகத்திலிருந்து வெளியேறி மலையகத்திற்கு வெளியில் வாழ்ந்து கொண்டு மலையகத்தையே நிரந்தர வசிப்பிடமாகக் கொள்ளும் இந்திய வம்சாவளியினர் தொழில் காரணமாக மலையகத்திற்கு வெளியில் வசிக்கின்ற இளம் தலைமுறையினர் கணிசமான அளவினர் இருக்கின்றனர். ........................
3. மலையகத்திலிருந்து வெளியேறி மலையகத்திற்கு திரும்ப முடியாத, திரும்ப விருப்பமில்லாத ஆனால் இந்திய வம்சாவளி என்ற அடையாளத்துடன் வாழ்பவர்கள்.. ...............
4. வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் அடையாளம் காண முடியாத, வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும், மலையகத்துடன் சம்பந்தமில்லாத ஆனால் இந்தியவம்சாவளியினர் என்ற பொது அடையாளத்துடன் அல்லது அடக்குமுறைகளை எதிர்த்து போராடி தீர்வு காண மலையக மக்களில் ஒரு பிரிவினராக அடையாளம் காணப்பட வேண்டியவர்களாவர். ..............
5. வடக்கு கிழக்கிலே இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளத்துடன் வாழும் (மலையகத்திலிருந்து குடிபெயர்ந்து) ஒரு இனசமூகமாக வாழ்வோர்..........................

(பக்கங்கள் 59, 60, 61)

## மா.செ.மூக்கையாவின் இன்றைய மலையகம் கட்டுரைத் தொகுதி 1995

மேற்படி நூலில் 19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த இந்தியவம்சாவளியினரை மலையகத் தமிழ் மக்கள் என குறிப்பிடுதல் இன்று மரபாகிவிட்டது' (பக்கம் 8) என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் அத்தொகுதியில் அரசாங்க அறிக்கைகளில் இந்தியத் தமிழர் என்று குறிப்பிடப்பட்டுள்ளவற்றைக் கூட மலையகத் தமிழர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் மலையகத் தமிழர் என்பதனையே அழுத்துகிறார்.

# மலையக மக்கள் தான்!

நன்றி - நூலகத்திட்டம்



ஒரு கடிதம்

# பத்தனை ஸ்ரீபாத கல்விக்கல்லூரி விவகாரம். சில வினாக்களும், சந்தேகங்களும்

பத்தனை, ஸ்ரீ பாத கல்விக் கல்லூரியை தான் தமது அமைச்சின் கீழ், ஒரு அமைப்பினை உருவாக்குவதன் மூலம், அதனை தனது பொறுப்பின் கீழ் கொண்டு வர இருப்பதாக இ.தொ.கா. தலைவர் குறிப்பிட்டுள்ளார். பெற்றோர்களாகிய எங்களுக்கு இது பல சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

1. கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழேயே எல்லா கல்லூரிகளும், அரசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளும் செயற்படுகின்றன. ஸ்ரீ பாத கல்லூரிக்கென தமது அமைப்பொன்றை ஏற்படுத்துவது சாத்தியமானதாக அமையுமா?
2. இக்கல்லூரி ஆரம்பித்து ஐந்து வருடங்கள் கழிந்தபின்னர், திடீரென இ.தொ.கா.விற்கு வந்த கரிசனைக்கான காரணம் யாது?
3. மலையக, இந்திய வம்சாவளி தமிழருக்கென உருவாக்கப்பட்ட இக்கல்லூரியை ஏனையோரும் நயவஞ்சகமாக அபகரித்துக் கொண்டதாகவும் பெயர் வைப்பதிலேயே சிக்கல் ஏற்பட்டதாகவும் கூறும் இவர் பிரேமதாச இக்கல்லூரிக்கு விஜயம் செய்த போதே (தலைவர் உட்பட சகலரும் யூ.என்.பி. அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்த காலம்) இது பற்றி பேசி பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம்.
4. பெருந்தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சின் செயற்பாடுகள் யாவை? அதனால் பெருந்தோட்ட தொழிலாளர்கள், ஊழியர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் யாவை? என்பது தொடர்பாக எவ்வித விளக்கமும் இல்லாத நிலையில், மேற்குறித்த விடயம் தொடர்பில் தனியொரு அமைச்சோ, அமைப்போ உருவாக்கப்படுமாயின் அது எவ்வகையில் செயற்படும், இதனால் யார் யார்? நன்மை பெற போகின்றார்கள் என்பது குறித்து சிந்திக்கும் போது பல சந்தேகங்கள் எழுகின்றன.
5. கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் இ.தொ.கா. தோல்வியடைந்தமைக்கு, ஆசிரியர்களும், மலையகத்திலுள்ள படித்தவர்களும் தான் காரணம் என பலமுறை கூறப்பட்டது. இத்தகைய சூழலில் ஸ்ரீபாத கல்லூரியை தனது பொறுப்பில் எடுக்கவுள்ளதாக இ.தொ.கா. தலைவர் குறிப்பிட்டிருப்பது பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.
6. மலையக கல்வி முன்னேற்றத்தில், அக்கறை செலுத்த வேண்டும் என்ற ஞானம் திடீரென பிறந்திருந்தால், தனியான ஒரு கல்லூரியை அமைத்து ஸ்ரீபாத கல்லூரியில், இல்லாததும், வேறு கல்லூரிகளில் உள்ளதுமான, விளையாட்டு, மனையியல், இந்துசமயம், ஆங்கிலம் போன்ற, பாடநெறிகளை ஆரம்பிக்கலாமே.
7. மேற்படி விடயம் தொடர்பாக, ஸ்ரீபாத கல்விக் கல்லூரி விரிவுரையாளர்களிடம் கேட்டபோது அதுபற்றி தங்களுக்கு எதுவுமே தெரியாது எனக் கூறிவிட்டனர். விரிவுரையாளர்களுக்கு கூட தெளிவுபடுத்தப்படாத, இவ்விடயம் மலையக மக்களுக்கு எத்தகைய விளக்கத்தை தரப் போகின்றது.

ஸ்ரீபாத கல்விக்கல்லூரியை உருவாக்குவதற்கான குறிக்கோள்கள், ஜெர்மனிய நிறுவனமான ஜீ.டீ.இசட் (G.T.Z) மூலம் மிகத் தெளிவாக முன் வைக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனம் 4 ம் கட்டமாக, பல கட்டிடங்களை அமைத்து வருகின்றது. அட்டன் பகுதி கல்வி முன்னேற்றத்திற்கென பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. வெளிநாட்டு நிறுவனம் ஒன்று மலையக மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கான ஒரு பெரிய திட்டமொன்றை வடிவமைத்து, இலங்கை அரசாங்கத்தின் அனுமதியையும் பெற்று செயற்படுத்தி வருகின்ற சூழ்நிலையில் தொழிற் சங்கமொன்று இதில் தலையீடு செய்வது பொருத்தமாக அமையுமா? என்பதை மலையக மக்களும், நேர்மையான கல்விமான்களும் சிந்திக்க வேண்

(தொடர்ச்சி பக்கம் 11இல்)

- இ.தோ.கா.வின் பிச்சை ....
- ''அங்கே புலிகள் இங்கே நீங்கள்'' ......
- மாக்குடுகல பாடசாலைக்கு காணி வேண்டும்....
- பொலிசாரின் இம்சைக்குள்ளாகும் கணிக்கா மக்கள்....

மலையக மக்கள் தற்போது அனுபவிக்கும் உரிமைகள் என்பது இ.தொ.கா. போட்ட பிச்சை ஆகும். இ.தொ.கா.வின் முயற்சியால்தான் பலர் கல்வி வசதியைப் பெற முடிந்தது. அதற்கு தொண்டமானின் வழிகாட்டலே காரணம். இ.தொ.கா. பல படித்தவர்களை உருவாக்கியது. அவர்களோ வேறு வழிகளில் செல்கின்றனர். இதனால் மலையக மக்கள் முன்னேற முடியாதிருக்கின்றனர்'' இப்படி கூறினார் இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் சென்லெனாட்ஸ் தோட்டப் பாடசாலை கட்டிட திறப்பு விழாவில் பேசும் போது அவர் மேற்படி கூறியமைக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. அதில் ஒன்று அவ்விழாவுக்கு கூடியிருந்த மக்களின் தொகை மிகவும் குறைவாகும்.

********

செப்டெம்பர் 10 ஆம் திகதி கொட்டகலை அந்தோனி மலை தோட்டத்தைச் சேர்ந்த பன்னீர் என்ற தொழிலாளி பொலிசாரினால் தோட்டத்தில் வைத்து தாக்கப்பட்டார். தோட்டத்துரையுடன் தோட்டத்துரையின் ஜீப்பில் சம்பளம் போடுவதற்கு காவலுக்கு சென்ற பத்தனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே மேற்படி தொழிலாளியை தாக்கியுள்ளார்.

அந்தோனி மலைக்கு தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுக்க மாலை 6 மணியாகி விட்டதால் 'என்ன தொர இன்னைக்கு வேலையும் நிப்பாட்டிட்டு 6 மணிக்கு சம்பளம் போட்டா நாம சாமான் வாங்க கடை தெருவுக்கு போறது எப்படி? என்று கேட்

தொடர்ச்சி பக்கம் 11இல்

# ஒரு மலையக மாணவனின் டயறி

எஸ்.உதயசூரியன்

**1-9-97 - 5-9-97**

திங்கள் பாடசாலை போனேன். சிவராஜா வரவில்லை. அவன் கொழும்புக்கு வேலைக்குப் போய் விட்டதாக மகேஸ் சொன்னான். சிவராஜா வீட்டில் அவுங்க அம்மாவும், அப்பாவும் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். சிவராஜாவும் அவனது அக்காவும் தான் ஸ்கூலுக்கு வருகிறார்கள். அவர்களது மூத்த அக்கா முன்னரே கலியாணம் முடித்து போய் விட்டா. சிவராஜா மட்டும் தான் ஆம்பள புள்ள அவன கூட படிக்க விடாம கொழும்புக்கு அனுப்பி விட்டுட்டாங்களே என நினைக்கும் போது கோபமாகவும், சிவராஜாவை நினைக்கும் போது கவலையாகவும் இருந்தது.

இடைவேளையின் போது சிவராஜாவின் அக்கா செல்வமரை கண்டு சிவராஜா பற்றி கேட்டேன். அவுங்க தோட்டத்தில் முருகையா என்று ஒரு தரகர் இருப்பதாகவும் அவன் தான் அங்குள்ள புள்ளைகளையெல்லாம் கொழும்புக்கு ஏற்றி அனுப்புவதாகவும், கூறினார். அந்த ஸ்கூலுலதான படிப்பு ஒன்றும் நடக்கமாட்டேன்கிறதே. அதோட இவன் படிச்சிட்டாப்புள என்னா தான் அப்புடி வேல கெடைச்சிற போவுது என்று சொல்லி சிவராஜாவை கொழும்புக்கு கூட்டிக் கொண்டு போனதாகவும், அவர்களது அம்மா எவ்வளவோ சொல்லி அழுதாலும், அதயெல்லாம் பெருசா அலட்டிக்காம அவுங்க அப்பா, முருகையாவோட சிவராஜாவை அனுப்பி வைத்ததாக கூறி அழுதார்.

தோட்டங்கள கம்பெனி எடுத்தாப் பிறகு, தொழிலாளர் எண்ணிக்கை குறைப்பு, வேலை நாள் குறைவு, வறுமை போன்ற காரணங்களால் கொழும்பில் 'தொண்டு' வேலைகள் செய்ய நிறைய பேர் போவது உண்மைதான். இருந்தாலும், சிவராஜா குடும்பத்த விட வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்து பலர் ஸ்கூலுக்கு வருகிறார்கள் தானே. படிப்பு இல்லாவிட்டால் இன்னும் மோசமாயில்லயா நம்மல ஏமாத்திப் புடுவாஙுக என நினைத்து, என்ன கஸ்டம் வந்தாலும் படிப்ப மட்டும் விட்டுற கூடாது என்று உறுதி கொண்டேன்.

புதன் காலை தமிழ் வாசிப்பு இடம் பெற்றது. சமயப்பாடம் நடைபெற்றது.

**8.09.97 - 12.9.96**

மேல் வகுப்பில் படிக்கும் ஒரு அக்காவை கிருஷ்ணா சேர் நுவரெலியா கூட்டிக் கொண்டு போய் ஏதோ பிரச்சினைப்படுத்தியதாக பேசிக்கொண்டார்கள். திங்கள் பாடசாலை போன போது அந்த அக்காவின் அண்ணன்மார்கள் இரண்டு பேரும், இரானித் தோட்ட ஆட்கள் 10 பேரும், ஒப்பீசுக்கு முன்னே நின்று கொண்டிருந்தார்கள். அவன் வந்தா இன்னிக்கு வெட்டாம விடமாட்டோம் என்று சொல்லிக் கொண்டு கோபமாக மீசையைத் தடவிக் கொண்டு ஒரு மாமா இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார்.

இவனுங்க இந்த அநியாயம் பன்னினா கொமரி புள்ளைகள எப்புடி நம்பி ஸ்கூலுக்கு அனுப்புறது மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லுவாங்க. தெய்வத்துக்கு முன்னுக்கு, குருதானே. ஸ்கூலுக்கு வார புள்ளகளுக்கு தாயாக, தகப்பனாக சகோதரனாக, வழிகாட்டியா இருக்க வேண்டியவுங்க. இப்புடி நடக்கலாமா என்று ஒரு பெரியவர் பலமாக சத்தம் போட்டு கூறினார். பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு உறவா இருக்கனும்கிறதுக்குதான். இவன் புருசனா இருந்திருப்பான் போல தெரியுது என்று பெரிய வகுப்பு அண்ணன் நக்கலாகவும், கோபமாகவும் கூறினார்.

ஏதோ நடந்து போச்சி, நாட்டில வேற ஸ்கூலுகளுல நடக்காத விசயமா? இத போட்டு இந்த தோட்டத்து ஆளுக இப்புடி அலட்டிக்கிறானுங்களே. தேனு எடுக்கிறவன் பொறங்கைய நக்காமலா போயிருவான். பொலிசுக்கு சொல்லி இந்த ஆளுகள அடிச்சி விரட்டுடுமுனு 'பொன்ஸ்' சேர் ஏசிக்கொண்டு போனார். இவன் உண்மை பெயர் முருகையா. ஆனால் 'மிரு' என்று தான் கூப்பிடுவார்கள். பிள்ளைகள் இவனுக்கு வைத்துள்ள பேர் 'பொன்ஸ்' இப்பகுதி பிரதேச சபை உறுப்பினருடைய தம்பி. பொலிஸ் சப் போட்டும் உண்டு. கிருஷ்ணா சேருடைய பிரண்ட். இவனும் நுவரெலியாவுக்கு 'காவலுக்காக' போனதாக பேசிக் கொண்டார்கள்.

பன்னீர் சேர் சமூகவிடயங்களில், சற்று தீவிரமுடன் ஈடுபட்டவர். நன்றாக படித்துக் கொடுப்பார். அவரை இந்த ஸ்கூலை இருந்து விரட்டுவதற்கும், பலமுறை பொலிசால பொய் சொல்லி காட்டிக் கொடுப்பதற்கும் காரணமாக இருந்தது இந்த 'பொன்ஸ்' தான்.

ஒரு மணியளவில் பொலிஸ் வந்தது. அதிபர் இன்று லீவு அதோடு, இந்த விசயத்த எல்லாம் இங்க வந்து பேசக்கூடாது. கல்வித் திணைக்களத்துக்கு எழுதியனுப்ப வேண்டும். இங்க நின்று கொலப்பம் பன்னினா கொண்டு போய் உள்ள தள்ளிப் புடுவோம் என்று, விசயத்தை அரைகுறை தமிழில், ஒரு தமிழ் பொலிஸ் கூறினார். அவன் வெளிய வராமலா போயிடுவான் வெளியில வச்சி கவனிச்சிகுவோம் என்று கூறியபடி வந்தவர்கள் போனார்கள். ஆசிரியர்கள் ஆங்காங்கே கூடி நின்று இவ்விடயம் பற்றி பலப்பல கருத்துக்களை கூறிக் கொண்டிருந்தனர். இந்த நாய் செய்ச வேலயினால ஸ்கூல் மானம் மட்டுமல்ல மலைநாட்டு மானமே போவுதுன்னு கிருபா சேர் சத்தம் போட்டு கூறிக்கொண்டு போனார். அவனுக்கு அரசியல்வாதிங்க சப்போட் இருக்கிறதுனால இன்னும் துணிவா நிறைய பேர கூட்டிக்கிட்டுப் போவான். என்று சிவலிங்கம் சேர் கூறினார். இவ்வாரம் ஒரு பாடமும் நடக்கவில்லை.

**15.09.97 - 19.09.97**

திங்கள், செவ்வாய், புதன் வீட்டிலிருந்தேன். சனியன்று பாரதி விழா தோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முற்போக்கு இளைஞர் மன்றம் அதனை ஏற்பாடு செய்திருந்தது. விழாவுக்கு மேடை போடுதல், பந்தடிகளத்தை கூட்டித் துப்புரவு செய்தல் போன்ற விடயங்களில் நாங்களும் ஸ்டோர் லயத்துப் பொடியங்களும் ஈடுபட்டோம். வியாழன், வெள்ளி ஸ்கூல் போனேன். பிரச்சினைப்பட்ட அக்காவை கண்டேன். கதைக்க விருப்பமாக இருந்தது. எனினும் பல டீச்சர்மார் ஒன்று சேர்ந்து அவரை விசாரித்துக் கொண்டு இருந்தனர். அவள் மீதுதான் குற்றம் உள்ளது என்பதை உறுதிப்படுத்த பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தனர். ''உனக்கு விருப்பம் இருந்துனால தானே 'மிரு' சேரோட போன'' என்று மீண்டும் மீண்டும் கேட்டனர். அதற்குப் பிறகு சேர்மார்கள் விசாரணை செய்தார்கள் பிறகு சேர்மார்களும், டீச்சர்மார்களும் கூடிக் கதைத்தனர். சிரித்தனர். சிவலிங்கம் சேருடைய கோஸ்டிய இதில் தலையிடாமல், இதில் குற்றம் செய்தது 'பொன்ஸ்' சேர்தான் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். கலாசார சீரழிவு மனுசனை எப்புடி எல்லாம் ஆட்டிப்படைக்குது என்று ஒரு அண்ணன் கூறியது எனக்கு நன்கு விளங்கியது.

சனி தோட்டத்தில் பாரதி விழா நடைபெற்றது. நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற பாடலை நான் பாடினேன். பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 'தேடிச் சோறு நிதந் தின்று' என்ற பாரதி பாடல் என்னை பலவாறாக சிந்திக்கத் தூண்டியது.

தொடர்ச்சி பக்கம் 11இல்

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ் - குடாநாடு சொர்க்கமும் அல்ல சுடுகாடுமல்ல!

யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசம். அங்கு இயல்பு வாழ்க்கை நடைபெறுகிறது. மக்கள் மகிழ்ச்சியுடன் இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கி சமாதானமாக வாழ்கின்றனர். புனரமைப்பு நடவடிக்கைகள் விரைவாக இடம் பெறுகின்றன. வன்னிப் பிரதேசத்தில் இருந்து மக்கள் மீள் குடியேற்றத்திற்காக தினம் தினம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே சில மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றாலும் அவற்றில் சம்மந்தப்படும் ஆயுதப்படையினர் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட்டு வருகின்றனர். விரைவில் எரிக்கப்பட்ட பொது நூலகத்திற்கான நிர்மாணப்பணி தொடங்கப்படும். ஒரே ஒரு பிரச்சினை தரைவழிப் பாதை திறக்கப்படுவது தான். குடாநாட்டு மக்கள் சகலதையும் பெற்று நிம்மதியாக வாழும் நிலை விரைவாக உருவாக்கப்படும். அதனை நோக்கியே ராணுவ சிவில் செயல்பாடுகள் சென்று கொண்டிருக்கின்றன. இவ்வாறு குடாநாட்டின் உயர் இராணுவ அதிகாரிகளும் கொழும்பில் உள்ள அரசாங்க உயர் மட்ட அதிகாரிகள் அமைச்சர்கள் கூறி வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு தமிழர்களின் பாரம்பரிய தமிழ் மண்ணாகும். அந்த மண்ணிலே சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமிப்புச் செய்து நிற்கின்றன. அங்கு கொலைகளும் பாலியல் வல்லுறவுகளும் சிறை சித்திரவதைகளும் நாளாந்தம் நிகழ்த்தப்படுகின்றன. குடாநாடு இன்று சுடுகாடாகவே காட்சி தருகிறது. இந்நிலையில் வன்னியில் இருந்து அங்கு மக்கள் திரும்பிச் செல்வதை அனுமதிக்க முடியாது. அங்கு ஏற்கனவே திரும்பிச் சென்றவர்கள் விடுதலைப் போராட்டத்திற்கு துரோகம் இழைத்துள்ளனர். அவர்கள் எக்கதிபட்டாலும் பரவாயில்லை. இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கம் கூறி வருகிறது.

அதேவேளை யாழ் குடாநாட்டில் உள்ள மக்கள் மத்தியில் பல்வேறு மட்டத்தில் பல்வேறு அபிப்பிராயங்கள் இருந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. வெளிநாட்டுத் தொடர்புகள் உடையவர்களும் தத்தமது சொந்த தேவைகளுக்கு வெளியே இருக்க விரும்புபவர்களும் ''அப்பப்பா யாழ்க் குடாநாட்டில் இருக்கவோ சீவிக்கவோ முடியாது'' என்று கூறுகிறார்கள். இராணுவ நெருக்கடிகள் வாழ்க்கைத் தேவைகளைப் பெற முடியாமை போன்ற காரணங்களைக் கூறுகிறார்கள்.

குடாநாட்டில் நிரந்தரத் தொழில்களையும் வருமானத்தையும் பெற்று வாழ்பவர்கள் அங்கே அவ்வளவு பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. இராணுவத்தின் கெடுபிடி குடாநாட்டில் மட்டுமா? இருக்கிறது. நாம் போகும் இடமெல்லாம் தான் இருக்கிறதே? நிலவுக்கு ஒழித்துப் பிற தேசம் போக முடியுமா? என்று கூறி நிற்கிறார்கள்.

மேலும் உயர் வர்க்கப் புத்திஜீவிகள் என்போர் ஒரு கால கட்டத்தில் தமிழீழப் போராட்டம் கட்டாயம் முன்னெடுக்கப்பட்டே ஆக வேண்டும் என உரத்துப் பேசி உற்சாகமூட்டியவர்கள். இன்று தலைகீழாக மாறி போராட்டமும் மண்ணாங்கட்டியும் என விரக்திப்பட்டு ஒன்றுமே வேண்டாம் எங்காவது நிம்மதியாக இருந்தால் போதும் என்று கூறுகிறார்கள்.

யார் இருந்தால் என்ன யார் இறந்தால் என்ன இந்த இடையில் அடிக்கிறதை அடித்து தேடிக் கொள்வதைக் கட்டிக் கொள்ளும் பதுக்கல் கொள்ளை லாப வியாபாரிகளுக்கு இராமன் ஆண்டால் என்ன? இராவணன் போனால் என்ன? என்ற நிலைப்பாட்டில் தமக்கு கொள்ளை இலாபம் கிடைத்தால் மட்டும் போதும் என்ற நிலைதான். அவர்கள் எல்லாத் தரப்பினரையும் வளைத்துப் போட வல்லவர்கள். அவர்களுக்கு சமாதானம் என்பது உகந்த ஒன்று அல்ல.



மண்ணோடும் மரத்தோடும் கடலோடும் போராடித் தம் வாழ்வை நடத்திவரும் விவசாயி தொழிலாளிகளைக் கேட்டால் பட்டது போதும் இனியும் பட எம்மால் முடியாது என்ற பெருமூச்சு விடுகிறார்கள். உயிர் உறவுகள் வீடு வாசல் அற்பசொற்ப சொத்து சுகம் யாவும் போய் விட்டது. தெருவிலும் தாழ்வாரங்களிலும் மர நிழல்களிலும் கோவில்களிலும் பட்ட வேதனை போதும் போதும் என்றாகி விட்டது. பச்சைத் தண்ணியைக் குடித்தாலும் சொந்த இடத்தில் இருந்து சாவதே மேலானது என்கிறார்கள்.

வெளிநாடுகளில் தமது பிள்ளைகளை குடும்பத்தவர்களை அகதிகள் என்ற பெயரில் அனுப்பி அந்த வருவாயில் ஓரளவு முளிப்பான வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் சமாதானம் வந்தால் அங்கிருந்து தம்மவர்களைத் திருப்பி அனுப்பி விடுவார்களோ என்ற உள்ளார்ந்த அச்ச உணர்வுடன் காணப்படுகின்றனர். இத்தகையவர்கள் யுத்தம் நடந்தால் தமக்கு ஆபத்து சமாதானம் வந்தால் வெளியில் உள்ளவர்களுக்கு நெருக்கடி என்று நினைக்கிறார்கள்.

ஒரு நீண்டநாள் தமிழரசுக் கட்சி உறுப்பினராகவும் தமிழர் கூட்டணி உறுப்பினராகவும் இருந்து தற்போது தம்மளவில் அமைதியாக இருக்கும் வயதான ஒருவர் பின்வருமாறு கூறுகிறார். அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டம் இரண்டுமே நடந்தாகி விட்டது. இறுதியில் இன்று எஞ்சி நிற்பது அழிவுகள் மட்டுமே. தந்தை செல்வா கூறிய இறுதி வார்த்தைகளான தமிழ் இனத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைதான் இன்று காணப்படுகிறது என்று ஆற்றாமை பேசுகிறார்.

ஒரு நடுத்தர வயதுடைய அரசாங்க உத்தியோகத்தர் கூறுகிறார். இனிமேல் ஒரு மூன்றாவது அரசியல் சக்தி கடந்த காலத் தவறுகளை மறுமதிப்பீட்டுக்கு உள்ளாக்கி சரியான பாதையில் முன்னேற முன்வரல் வேண்டும். ஆனால் அது இன்றுள்ள சூழலில் உடனடிச் சாத்தியமில்லை. பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற பிரச்சினை இருக்கிறது என்றும் கூறுகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி ஒருவரின் கருத்து இவ்வாறு காணப்பட்டது. அவர்கள் ஒரு நல்ல ராணுவக் கட்டுக் கோப்புடன் இருப்பது இன்றும் உண்மை. அவர்களது ஆரம்ப காலப் போராட்டங்களில் மக்களைப் பற்றிய அக்கறைகள் நிறைய இருந்தன. அவர்களிடம் அரசியல் தந்திரோபாயம் படிப்படியாகக் குறைந்து ராணுவ முக்கியத்துவம் மட்டுமே எஞ்சி நிற்கிறது. இருப்பினும் அவர்களுடன் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடாத்துவது நிராகரிக்க முடியாத ஒரு அம்சமாகும்.

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் பற்றி ஒருவர் கூறுகையில் அதன் விபரங்கள் முழுமையாக நம்மை வந்தடையவில்லை என்பது ஒருபுறமிருக்க அது பற்றி சிந்திப்பதற்கே முடியாத அளவிற்கு அன்றாடப் பிரச்சினைகள் நம்மைச் சூழ்ந்து நெருக்கடிகளைத் தந்த வண்ணமே இருக்கின்றன. அத்துடன் தீர்வுத்திட்டத்தின் உண்மை நிலை பற்றி அறிய முடியாதவர்களாகவே நாம் இருந்து வருகின்றோம் என்றார்.

இவற்றினிடையே யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விபரம் கவனத்தைத் தொடுகிறது. யுத்தத்தால் இதுவரை 50 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. அதில் 10 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. 25 ஆயிரம் வீடுகள் ஐம்பதுசதவீத அழிவையும் மிகுதி 15 ஆயிரம் வீடுகள் சிறுசிறு சேதங்களையும் அடைந்து காணப்படுகின்றன. அத்துடன் 2 ஆயிரம் கடைகள் 500 தனியார் கட்டிடங்கள் 150 கைத்தொழில் அலகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறது.

மேற்கூறிய புள்ளி விபரம் முழுமையானதாக இருக்க முடியாது. ஏனெனில் இன்னும் குடாநாட்டில் மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத பகுதிகள் உள்ளன. பலாலி, காங்கேசன் துறை, மாதகல் போன்ற பகுதிகளையும் அவற்றின் அருகாக உள்ள பலமைல் சுற்றுப் பிரதேசங்களில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படவில்லை. அப்பகுதிகளின் வீடுகள், கட்டிடங்கள், மற்றும் தொழிலகங்கள் அடைந்துள்ள சேதங்கள் பெருமளவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலை உட்பட பல வைத்திய சாலைகள் சேதமடைந்தன. தெல்லிப்பழையில் அமைந்த அரசினர் வைத்தியசாலையும் புதிதாக நிர்மாணம் பெற்று வந்த புற்று நோயாளர் வைத்தியசாலையும் கடுமையான சேதங்களை அடைந்தன. தெல்லிப்பளை வைத்தியசாலைக் கட்டிடம் எந்த நிலையில் உள்ளது என்பதே இதுவரை தெரியாத நிலை. யாழ்ப்பாண வைத்திய சாலை வைத்திய நிபுணர்கள் தொட்டு கட்டிடம், மருந்து வகை, சேவை யாவற்றாலும் பாதிப்படைந்த நிலையில் தான் இயங்கி வருகின்றது. நாளாந்தம் நோயாளர்கள் அதிகரித்து வருகிறார்கள். அவர்களுக்குரிய தேவை சேவை என்பன தாழ்நிலையில் தான் காணப்படுகின்றது.

இதேபோன்று யாழ் பல்கலைக் கழகத்தின் நிலையும் மிகக் குறைந்த தேவைகளுடன் தான் இயங்கி வருகின்றது. குறிப்பாக மருத்துவபீட விரிவுரையாளர்கள் இல்லாமையால் அப்பீடம் மூடப்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. யாழ் தொழில் நுட்பக் கல்லூரிகளும் ஏனைய சாலைகளும் மேற்கூறப்பட்ட அரை குறை நிலையுடன் தம்மளவில் இயங்கி வருகின்றன.

இன்று யாழ் குடாநாட்டில் நாலே முக்கால் லட்சம் மக்கள் 'வசிப பதாக அண்மைய யாழ் - செயலக அறிக்கை கூறுகின்றது. இவர்களில் பதினைந்து வீதமானவர்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீள முடியாத நிலையில் இடம் பெயர்ந்தவர்களாகவே இருந்து வருகின்றனர். இவர்களுக்கு மாதம் 1260 ரூபாவிற்கான நிவாரணம் உலர் உணவாக வழங்கப்பட்டு வருகின்றது. வருமானம் குறைந்தோருக்கான நிவாரணமும் மண்ணெண்ணை கட்டுப்பாட்டு விலையிலும் வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாண நகரத்தை புனரமைத்து ஓரளவிற்கு இயல்பான நகரத் தோற்றத்தைக் கொண்டு வந்து விட அரசாங்கமும் இராணுவ உயர் பீடமும் முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் யாழ் நகரத்தின் பொலிவிற்கும் எழிலுக்கும் அரண் செய்து நின்ற பாரிய கட்டிடங்களும் கடைத் தொகுதிகளும் வீதிகளும் பழைமை வாய்ந்த டச்சு கோட்டையும் அதனைச் சூழ உள்ள இடங்களும் யுத்தப் பேரழிவின் சிதைவுகளாகவே இருந்து வருகின்றன. கிராமப் புறங்களிலும் இதே நிலைதான். இடிபாடுகளும் அழிபாடுகளும் சில இடங்களைச் சுடு காடுகளாக்கியே காட்டுகின்றன.

யாழ்ப்பாண விவசாயம் முற்று முழுதான அழிவுக்கு உள்ளாகி நிற்கிறது. குடாநாட்டிற்கு அப்பாலான சந்தை வாய்ப்போ அதற்குரிய போக்குவரத்து வசதிகளோ இல்லாத காரணத்தினால் கடும் முயற்சியாலும் அதிக முதலீட்டாலும் விவசாயம் செய்து என்ன பயன் என்ற கேள்வி தான் குடாநாட்டு விவசாயிகளிடம் காணப்படுகிறது.

குடாநாடு இத்தகைய நிலையில் இருக்கும் போது அங்கு முழுமையான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது சிரமத்தின் மேல் சிரமமானதொன்று என்பது விளங்கிக் கொள்ளக் கூடியதாகும். ஏனெனில் குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதால் யாவும் சரி என்ற நிலை இல்லை. வன்னிப் போர் தொடர்ந்த வண்ணம் உள்ளன, அதன் ஒவ்வொரு பாதிப்பும் பிரதிபலிப்பும் குடாநாட்டை வந்தடைகிறது. அத்துடன் குடாநாட்டிற்குள்ளும் விடுதலைப் புலிகளின் போராட்ட செயல்பாடுகள் தொடர்கின்றன. ஆங்காங்கே மோதல்களும் அதன் எதிரொலியாகப் பதில் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. அதன் காரணத்தால் தேடுதல் சுற்றிவளைப்பு, ஆட்களைக் கொண்டு செல்லுதல் இராணுவத்தால் தொடரப்படுகிறது. காணாமல் போவோரது பட்டியல் குறைந்துள்ளதே தவிர தொடர்ந்து அந்தப் பட்டியல் நிரப்பப்படுகின்றன. பாலியல் வல்லுறவுகள் இராணுவத்தால் தொடர்ந்தும் நடாத்தப்படுகின்றன. யாழ் - ராணுவ உயர் அதிகாரி கொடுத்துள்ள ஒரு விளக்கத்தில் நாடு பூராவும் பாலியல் வன்முறை நிகழவே செய்கிறது. அதில் ஒன்றாகவே யாழ் குடாநாட்டுச் சம்பவங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

இன்று யாழ் குடாநாட்டு நிலைமை பற்றி பலவாறு நோக்கப்பட்டாலும் அங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு அன்றாட தேவைகளும் இயல்பு வாழ்க்கையும் அச்சமற்ற ஜனநாயக வாழ்வும் அவசியம் தேவைப்படுகிறது. அவர்களது தேவைகள் எதிர்பார்ப்புகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். மொட்டையாகவே குடாநாடு சுடுகாடாகி நிற்கிறது என்று கூறிக் கொள்வதோ அல்லது அங்கு இயல்பு வாழ்க்கை பூரணமாகி சொர்க்கமாக மாறி வருகின்றது என்று கூறுவதோ அர்த்தமற்றதாகும்.

குடாநாட்டு மக்கள் இன்றைய நிலையில் தமது முன்னைய வாழ்க்கை நிலைமைகளுக்குத் திரும்பி விடலாம் எனக் கனவு காணவும் முடியாது. அல்லது எல்லாமே முடிந்து விட்டது என்ற விரக்தி நிலைக்கு வந்து கொள்ளவும் கூடாது. 'தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்று காணப்படுவதையே அவர்கள் விரும்புகிறார்கள். பட்ட வேதனைகள் துன்பங்கள் காரணமாக எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளும் நிலையில் குடாநாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்று அரசாங்க - ராணுவத் தரப்பு நினைத்தால் அது தப்புக் கணக்காகவே இருக்கும். நியாயமான அரசியல் தீர்வு அதன் மூலமான சமாதான சூழல் அதற்கூடான இயல்பு வாழ்க்கை என்பது தான் சராசரி குடாநாட்டு மக்களிடம் காணப்படும் இன்றைய எண்ணக் கருத்தாகும். அதில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் தேவை அவசியம் என்பனவற்றையும் அவர்கள் வலியுறுத்துகிற தன்மையையும் அவதானிக்க முடிகிறது.

அ.பூபதி

நன்றி - நூலகத்திட்டம்





# தந்தையும் மைந்தரும்
# நிஜங்களும் நிழல்களும்

1

இமயவரம்பன்

இவ்வருடம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிறந்து ஒரு நூற்றாண்டு நிறைவைக் குறிக்கிறது. இதையொட்டிப் பல நினைவுக் கட்டுரைகள் வந்துள்ளன. தமிழரசுக் கட்சியும் அதன் மாற்று வடிவாக உருவான தமிழர் விடுதலைக் கூட்டணியும் இழந்த தமது பொற் காலத்தை மீட்டெடுக்கும் ஒரு வாய்ப்பாக இந்த நூற்றாண்டைப் பயன்படுத்துகின்றன. அதில் எதிர் பாராதது எதுவும் இல்லைத்தான். தமிழ்த் தேசியவாத அரசியலின் சீரழிவைத் தமிழரசுக் கட்சியின் இறுதியாண்டுகள் அடையாளம் காட்டின. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்த் தேசிய வாத அரசியலில் 'இன ஒற்றுமையின்' சின்னமாகக் காட்டப்பட்ட போதும் உண்மையில் அது தமிழ்த் தேசியவாதிகளது பாராளுமன்றத் தரகு அரசியல் வறுமையின் இழிநிலையின் வெளிப்பாடே ஒழிய வேறெதுவுமில்லை. இந்த உண்மையை நாம் தெளிவாகக் காணச் சில ஆண்டுகளே தேவைப்பட்டன.

ஈழத்தின் தமிழ்த் தேசியவாத அரசியல், திட்டமிட்டு வளர்க்கப்பட்ட பல மயக்கங்களை ஆதாரமாகக் கொண்டே தன்னை நிலை நிறுத்தி வந்துள்ளது. இந்த மயக்கங்கள் பல்வேறு பரிமாணங்களை உடையது. தமிழரது வரலாற்றுப் பெருமைகள், தமிழின் தொன்மை, தமிழரது (முக்கியமாக குடாநாட்டுத் தமிழ் மேட்டுக்குடிகளது) அறிவின் மேன்மை பற்றிய மயக்கங்கள் தமிழ்த் தேசியவாதத்தின் ஆதாரமான கூறுகளாக இருந்தன.

மறுபுறம், தலைவர்கள் பற்றிக் கட்டியெழுப்பப்பட்ட சில விதமான படிமங்கள், இந்த நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றிருந்த உள்நாட்டு வெளிநாட்டு அரசியற் போக்குகளின் தன்மைக்கு வசதியாக உருவாக்கப்பட்டவை. அரசியற் சூழ்நிலை மாறும்போது இப் படிமங்களும் தமது தன்மையில் மாறி வந்துள்ளன. தலைவர்களை வர்ணிக்கப் பயன்பட்ட அடைமொழிகளில் நாம் இதைக் காண முடியும்.

மஹாத்மா முதலான இந்தியத் தேசிய காங்கிரஸ் அடைமொழிகள் முதல், பெரியார், அறிஞர், நாவலர், கலைஞர் ஆகியவர் ஊடாக ஜெயலலிதாவை வர்ணித்து பல்வேறு நாமங்கள் வரை பட்டங்களும் புகழாரங்களும் மலிந்து பொருளற்றுப் போய் விட்ட தமிழகத்தினின்றும் சற்று வித்தியாசமான முறையில் ஈழத்துத் தமிழ் தேசியவாதத் தலைவர்களது படிமங்கள் கொஞ்சம் கவனமாகவே விருத்தி செய்யப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

வெள்ளையராட்சியின் போது பிரித்தானிய அரசாங்கத்துடனும் அரச பரம்பரையினருடனும் பேசும் போதும் அவர்களால் வழங்கப்படும் பட்டங்களும் தகுதியின் அடையாளங்களாகக் காணப்பட்டன. பொன்னம்பலம் ராமநாதனின் 'சேர்' பட்டம் முதல், சீமைக்குப் போய் வாதாடிச் சிங்கள இனவாதிகளைச் சிறை மீட்ட சீமானுடைய பிரதாபங்கள் வரையானவை பற்றிப் பேசும் வழமை இப்போது மங்கி விட்டாலும் மடிந்து விடவில்லை. இந்தச் சீமான்களது பழமைவாதமும் சாதி வெறியும் பிரித்தானிய விசுவாசமும் அவர்களது தமிழ்த் தேசிய வாதத்தினின்று பிரிக்க முடியாதவை. பிரித்தானிய மகாராணியாருக்குக் கணக்குக் கற்பித்தவர் என்று சொல்லிக் கொண்டவரும் பின்னர் மகாராணிக்குத் தந்தியடித்து மாவிட்டபுரம் கோவிலில் தாழ்த்தப்பட்ட சாதியார் புகுவதை எதிர்த்து வழக்காடியவருமான சுந்தரலிங்கமும் அந்த மரபில் வந்தவர்தான்.

(ஆங்கிலம்) படித்தவர், பாராளுமன்றத்தில் (ஆங்கிலத்தில்) விவாதிக்கக் கூடியவர் போன்ற தகுதிகளும் தமிழ்த் தேசியவாதத்தின் அதி முக்கியமான தகுதிகளாகவே நீண்ட காலமாக இருந்து வந்தன. இந்த விதமான அதிபுத்திசாலித் தலைமையின் சிகரமாகத் தன்னைக் காட்டிக்கொண்ட 'தனிப் பெரும்தலைவர்' ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவரது அரசியல் சாதுரியம் மலையக மக்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறித்த பின்பும் அவரால் வடமாகாண அரசியலில் ஆதிக்கம் செலுத்த முடிந்தது. 1956 ம் ஆண்டில், அவரால், யூ.என்.பி, சிங்கள மொழிக் கொள்கையை முன்வைத்துத் தேர்தலில் குதிப்பதைத் தடுக்க முடியாமற் போன பின்பு, தமிழ்த் தேசியவாத அரசியலில் ஒரு சிறுதிசை மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக உருவான தமிழரசுக் கட்சி இருபது வருடங்கட்கு மேலாகத் தமிழ்த் தேசியவாத அரசியலில் ஆதிக்கம் செலுத்தியது.

தமிழ்க் காங்கிரஸிலிருந்து தமிழரசுக் கட்சிக்கு அரசியற் தலைமை மாறியதில் தமிழரசுக் கட்சியின் அரசியலில் இருந்த ஒரு வெகுசனப் பண்பு முக்கிய பங்கு வகித்தது. ஆயினும் தமிழ்க் காங்கிரஸின் சரிவின் பின்பு தமிழரசுக் கட்சி தன்னைத் தெளிவாகவே எசமானத்துவ அரசியலுடன் இணைத்துக் கொண்டு விட்டது. இதன் காரணம் தமிழரசுக் கட்சியின் அரசியல் வெகுசனங்களையும் வெகுசன அமைப்புக்களையும் பயன்படுத்திய போதும், ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையினரது நலன் சார்ந்து அமைந்த ஒன்றல்ல என்பதை 1960 களில் தெளிவாகக் காணமுடிந்தது.

தமிழரசுக் கட்சியின் அரசியற் தந்திரோபாயங்களில் முக்கியமான ஒன்று அதன் தலைவர் செல்வநாயகத்தின் படிமமாகும். 'சிங்களம் மட்டுமே' பற்றிய விவாதம் தென்னிலங்கையில் சூடேறிய போது செல்வநாயகம் 'தீர்க்க தரிசி' என்றும் 1956 ல் தேர்தலின் வெற்றியின் பின்பு 'தமிழரசுத் தந்தை' என்றும் பின்னர் 'ஈழத்துக் காந்தி' என்றும் அழைக்கப்பட்டார். இந்த மூன்று அடைமொழிகளும் தருணமறிந்து தமிழரசுக் கட்சிப் பிரசாரகர்களால் பயன்படுத்தப்பட்டன. 1956 முதல் 1961 சத்தியாக்கிரகம் வரை இந்தப் படிமங்களால் மிகுந்த பயன் இருந்தது. இதன் பின்பும் செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனமும் 'காந்தியமும்' தமிழரசுக் கட்சியினரால் பயன்படுத்தப்பட்டன. ஆயினும் 1965 க்குப் பின்பு தமிழரசுக் கட்சியின் தலைமை ஆட்டங் காணத் தொடங்கிவிட்டது.

1970 களில் இலங்கையிலும் உலகத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் சில புதிய படிமங்களது தேவையை வலியுறுத்தின. 1956க்குப் பின்பு 'இரும்பு மனிதராக' நாகநாதனும் 1960 களில் 'தமிழரசுத் தளபதியாக' அமிர்தலிங்கமும் அறியப்பட்டிருந்தனர். இது போன்ற பட்டங்களின் உருவாக்கத்தில் 'சுதந்திரன்' ஏட்டுக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தது. இவற்றில் தமிழகத்தின் திராவிட இயக்கத்தின் பட்டங்களது சாடை தென்பட்டதை நாம் கவனிக்காமல் விட இயலாது. ஆயினும் 1970 தேர்தலில் தோல்வி கண்ட 'தளபதி' மீண்டும் தனது பாராளுமன்றப் பிரவேசத்தை நடத்த அவருக்கு 'ஈழத்து முஜிபுர்' பட்டமும், முஜிபுர் கவிழ்ந்த பிறகு, 'ஈழத்து அரபாத்' பட்டமும் சூட்டப்பட்டன.

இவையெல்லாம் காலத் தேவையையொட்டி உருவாக்கப்பட்ட படிமங்களின் வரிசையில் அடங்குவன.

சென்ற வருடம் அமிர்தலிங்கத்தைப் பற்றி சபாரத்தினம் என்பாரது சரிதை நூல் வெளியானது. அதில் மிகவும் கவனமாக அமிர்தலிங்கத்தை மிதவாத அரசியலின் இலக்கணமாகக் காட்டும் முயற்சியை எவரும் தவறவிட்டிருக்க முடியாது. இதே அமிர்தலிங்கம் பற்றி இருபது வருடங்கள் முன்பும் முன்வைக்கப்பட்ட படிமமும் பத்து வருடங்கள் முன்பு அவரது நினைவுக் குறிப்புக்களில் வெளியான கருத்துக்களும் அடையாளம் காட்டும் மனிதர் வேறொருவர். நாளை, இதே அமிர்தலிங்கம் ஈழத்துக் காந்தியாரது உண்மையான 'காந்திய' வாரிசாக நம்முன் காட்டப்படலாம். 'மகாத்மா' காந்தி பற்றிய மயக்கங்கள் இந்தியாவில் இன்னமும் உள்ளன. அதுபோல இலங்கையிலும் உள்ளன. இவை தெளிவடையும் போது இந்தக் காந்தி படிமத்தின் மறுபக்கம் நாம் அறிந்த பக்கத்தை விட அதிகமாக 'ஈழத்துக் காந்தி' செல்வநாயகத்துக்கும் அவரது 'காந்திய' மைந்தர்களுக்கும் பொருந்துமா என்பதை நாம் பின்னர் கவனிப்போம்.

இக்கட்டுரையின் நோக்கம் செல்வநாயகம் என்ற தமிழ்த் தேசியவாதத் தலைவரது அரசியல் முக்கியத்துவத்தைக் குறைவாக மதிப்பிடுவது அல்ல. அவரதும் தமிழரசுக் கட்சியினதும் முக்கியத்துவம் பற்றிய ஐயங்கள் எவருக்கும் இருக்க நியாயமில்லை. ஆயினும் அவை எந்தத் தமிழ்த் தேசத்தின் தேசியவாதம் என்பதையும் அது பற்றிக் கட்டியெழுப்பப்படும் கற்பனைக் கதைகளையும் ஆராய்வது அவசியம். தமிழரசு அரசியல், ஏன் எங்கே தவறிழைத்தது என்பதை அறிய முயலும் போது, அவற்றுக்கான பதில்களைச் சிங்களப் பேரினவாதத்திற்குள் மட்டுமே தேடுவது சிலருக்கு வசதியானது. மறுபுறம் ஜி.ஜி.பொன்னம்பலம் போன்றோரது பார்வைக் கோணத்திலிருந்து இன்னமும் வைக்கப்படும் விமர்சனங்கள் ஈழத்தின் தமிழ்த் தேசியவாத அரசியலின் சில அடிப்படையான பிரச்சினைகளை ஒதுக்கிவிடுகின்றன.

அடுத்துவரும் பகுதிகளில் 'தமிழரசுத் தந்தை' பற்றிய காந்திய, தீர்க்கதரிசனப் படிமங்கள் பற்றியும் அந்தக் கட்சியின் அரசியலின் உண்மையான தன்மைக்கும் மக்கள் முன் வழங்கப்பட்ட படிமத்துக்கும் உள்ள வேறுபாடு பற்றியும் கவனிப்போம். தமிழரசுக் கட்சியின் தலைமையின் வரலாற்று வளர்ச்சி 1983 ல் அதை எங்கே கொண்டு வந்து விட்டது என்று அறிவோம். 'ஏன்' என்ற கேள்விக்கான பதிலில் ஒரு பகுதியாவது இங்கு கிடைக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. அதை விட முக்கியமாகத் திரிப்புக்களற்று வரலாற்றைப் பார்க்கும் முயற்சிகட்கு இது ஒரு பங்களிப்பாக இருக்கும் என்பது என் நம்பிக்கை.

## மனிதர்களா? வெள்ளெலிகளா?

அமெரிக்காவின் ஆயுதப் படைகளது கேந்திரம் பென்றகன். அதன் செயல்கட்கு அமெரிக்க அரசு நேரடியாகவே பொறுப்பானது.

நாட்டின் பாதுகாப்பின் பேரால் பலவிதமான காரியங்களில் இதுவும், அமெரிக்காவின் கண்காணிப்பு நிறுவனங்களும் நடந்து கொள்கின்றன. அமெரிக்காவில் காலங்கடந்தே பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வருகின்றன. அவற்றுள் ஒன்று கதிரியக்கத்தை மனிதரில் பிரயோகித்தல் பற்றிய பரிசோதனைகள் தொடர்பானது.

இதற்கு ஆளாகிறவர்கட்கு இதன் ஆபத்துக்கள் பற்றிய உண்மைகள் கூறப்படுவதில்லை. அலஸ்கா மாநிலத்தின் எஸ்கிமோவர் 85 பேருக்கும் அலஸ்கா அமெரிந்தியர் (அத்தாபாஸ்கன் இனத்தோர்) 17 பேருக்கும் இவ்வாறு அயடின் 131 எனும் கதிரியக்கம் கொண்ட அயடின் மருந்து பிரயோகிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

ஆதிவாசி சிறுபான்மைத் தேசிய இனத்தவர்கள் இவ்வாறு நடத்தப்படுவது போலவே கறுப்பர், ஸ்பானியர், வறியோர், மூளை வளர்ச்சி குன்றியோர் போன்ற சமூகப் பிரிவினர் அமெரிக்க நிறுவனங்களது 'மனித ஆய்வுகூடப்' பரிசோதனைகட்கு ஆளாகி வந்துள்ளனர்.

அவற்றின் முடிவிற் போலவே பென்றன் ஆய்வின் முடிவிலும் இத் துஷ்பிரயோகத்தின் தீய விளைவுகளுக்கு 'புள்ளி விவர முக்கியத்துவம்' இல்லை என்று தட்டிக் கழிக்கப்பட்டுள்ளது.

## விஷ வியாபாரிகள்

சீனாவின் மக்கள் தொகை உலகினதில் ஐந்திலொன்று ஆயினும் அங்கு புகைப்போர் தொகை உலகில் புகைப்போர் தொகையில் காற்பங்கிற்கும் அதிகம். இதற்கு ஒரு காரணம் மேலை நாடுகளில் புகைத்தலின் அபாயங்கள் பற்றிய பிரச்சாரத்தால் புகைத்தல் அங்கு குறைந்து விட்டது. புகையிலைக் கம்பெனிகள் அமெரிக்காவில் புகைத்தலால் நோயுண்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. ஆயினும் சிகரெற் உற்பத்தியாளர்கள் ஓயவில்லை. வேறு சந்தைகளைத் தேடிக் கண்டுபிடித்து வருகிறார்கள். ஆபிரிக்காவில் கணிசமான அளவுக்கு இவர்கள் ஊடுருவி விட்டனர்.

கடத்தற் காரர்கள் மூலம் இப்போது சீனாவுக்குள் புகையிலைத் தீர்வையைத் தவிர்த்து விற்பதால் விற்பனையை அதிகரித்துக் கொள்ளை லாபமும் அடிக்க முடிகிறது. சிகரெற் கடத்தற்காரர்கள் 1990 ல் கடத்திய தொகை 12 கோடி. 1995 ல் இது 25 ஆக உயர்ந்துள்ளது. இக்கடத்தலில், சிகரெற் கம்பனிகள் நேரடியாகவே பங்குபற்றுவதாக பெல்ஜியத்திலுள்ள சர்வதேசப் புற்றுநோய் எதிர்ப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை பேசும் அமெரிக்கா, தனது கொலைகாரப் புகையிலைக் கம்பனிகளைத் தடைசெய்து மனித இனத்தைக் காப்பாற்ற முன்வருமா?

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு புரட்சிகர எழுச்சியின் நினைவலைகள்

## 1966 ஒக்ரோபர் 21இன் 31வது வருட நினைவு

வட பகுதியின் முக்கிய விவசாய நகரங்களில் ஒன்று சுன்னாகம் யாழ்.நகரத்தில் இருந்து வடக்கு நோக்கிய காங்கேசன்துறை பிரதான வீதி அந்நகரத்தின் ஊடாகவே செல்கிறது. பரபரப்புடன் திகழும் சுன்னாகம் சந்தை அன்று மாலை ஒய்ந்து கொண்டது. அன்றைய நாள் 1966 ம் ஆண்டு ஒக்ரோபா 21 ம் திகதி. சந்தையின் மேற்குப் புறத்தில் கந்தரோடை வீதியை மருவினாற் போல் சிறு மைதானத்தில் ஐந்து பத்து இருபத்தைந்து ஐம்பது என மக்கள் குழுமிக் கொண்டிருந்தனர். அவர்களில் இளைஞர்கள். நடுத்தர வயதுடையோர் வயது சென்றவர்களும் அடங்கியிருந்தனர். சிகப்பு சட்டைகள் தொப்பிகளுடன் பலர் காணப்பட்டனர். பி.ப. 4-30 மணியளவில் அவ்வாறு கூடி நின்றவர்களின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரமாக இருந்தது. இவ்வாறு பெருந்தொகையில் மக்கள் எதற்காக கூடியிருந்தனர். அதாவது அன்றைய நாட்களில் பத்திரிகைகளால் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கமிட்டி சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு ஊர்வலத்தை சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை நடாத்த இருந்தது. யாழ் முற்ற வெளியில் பொதுக் கூட்டத்தை நடாத்தவும் ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் அன்றைய நிலையில் அவ் ஊர்வலத்திற்கு பொலீஸ் அனுமதி வழங்கவில்லை. பொதுக் கூட்டத்திற்கு அனுமதி கொடுத்திருந்தது. மேற்படி பொலீஸ் தடையை மீறிய ஊர்வலம் ஒன்றிற்காகவே மக்கள் சுன்னாகம் சந்தை மைதானத்தில் குழுமியிருந்தனர். நாலரை மணியளவில் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா.சண்முகதாசன் அவ்விடத்திற்கு மோட்டார் காரில் வந்து இறங்குகிறார். அங்கு ஏற்கனவே மக்கள் மத்தியில் நின்று கொண்டிருந்த கட்சியின் வடபிரதேச தலைவர்களுடன் உரையாடுகிறார். அதேநேரம் ஊர்வலம் செல்வதற்கு தீர்மானித்த காங்கேசன்துறை பிரதான வீதியில் அமைந்திருந்த சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் பெரும் தொகையான பொலீஸ் படை தமது தலைமை அதிகாரிகளுடன் திரண்டிருந்தது. இறுதியாக ஒரு தடவை பொலீஸ் அதிகாரிகளிடம் சென்று ஊர்வலத்திற்கு அனுமதிக்குமாறு கேட்க வேண்டும் என்ற முடிவுடன் தோழர் சண் பொலீஸ் நிலையம் செல்கிறார். அங்கே காங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அத்தியட்சர் லியனகே தலைமை இன்ஸ்பெக்டர் மூர்த்தி, சுன்னாக பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் மற்றும் யாழ் நகரில் இருந்து வந்த பொலீஸ் அதிகாரிகள் நின்றிருந்தனர். ஊர்வலத்திற்காக இரண்டாயிரத்திற்கு மேல் மக்கள் வந்து கூடியுள்ளனர். இறுதி நேரத்தில் ஊர்வலத்தை அனுமதிக்குமாறு தோழர் சண் பொலீஸ் அதிகாரிகளைக் கேட்கிறார். அவர்கள் மறுக்கிறார்கள். சற்று வாக்குவாதம் சூடு பிடிக்கிறது. இந்நேரத்தில் பொலீஸ் அதிகாரிகள் தோழர் சண்ணுக்கு தேனீர் கொடுக்க முற்படுகிறார்கள். அவர் அதனை மறுக்கிறார். தேனீர் குடித்தால் என்ன? என ஒரு அதிகாரி சற்று தணிவாகக் கேட்கிறார். நான் உங்களிடம் அனுமதி கேட்க வந்தேனே தவிர தேனீர் குடிப்பதற்கல்ல. அது மட்டுமல்ல இன்னும் சிறிது நேரத்தில் உங்கள் குண்டாந்தடி எங்கள் மீது விழப் போகிறது. அப்படி இருக்க உங்களிடம் என்னால் எப்படி வாய் நனைக்க முடியும். முகத்திலடித்தாற் போல் கூறிய சண் மீண்டும் மக்கள் திரண்டிருந்த இடத்திற்குத் திரும்புகிறார். வடபிரதேசக் கட்சித் தலைவர்களும் வாலிபர் இயக்க தலைமைத் தோழர்களும் சில நிமிடங்கள் தனியாகக் கலந்து பேசிக் கொண்டனர். தடையை மீறி ஊர்வலம் செல்வது என முடிவாகிறது. தோழர் சண்முகதாசனின் அல்பேனியப் பயணம் அத்துடன் அவரது உடல் நிலை காரணமாக ஊர்வலத்தில் அவர் கலந்து கொள்ள வேண்டாம். என்ற முடிவு அவருக்கு தெரிவிக்கப்படுகிறது. முதலில் அதனை அவர் ஏற்க மறுத்தாலும் கட்சித் தோழர்களின் வற்புறுத்தலால் அவர் யாழ் நகர் சென்று கூட்டத்தில் உரையாற்றுவது என்ற முடிவுடன் அவ் அவ்விடத்தை விட்டு அனுப்பி வைக்கப்படுகிறார்.

அடுத்த நிமிடம் ''சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்'' என்னும் கொட்டை எழுத்துச் செம்பதாகையை இரண்டு செஞ்சட்டை அணிந்த தோழர்கள் தூக்கி நிறுத்தி நிற்கிறார்கள். திரண்டிருந்த மக்கள் ஊர்வலத்திற்கு அணிவகுக்கிறார்கள். ஊர்வலத்தின் முன்னணியில் அன்றைய கட்சியின் வடபிரதேசக் கமிட்டியின் தலைவர்களான தோழர்கள் கே.எம்.சுப்பிரமணியம் வீ.ஏ. கந்தசாமி டாக்டர் சு.வே.சீனிவாசகம், கே.டானியல், இ.கா.சூடாமணி ஆகியோர் நிற்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து அன்றைய வாலிபர் இயக்கத்தின் வடபிரதேச தலைமைத் தோழர்களான சி.கா.செந்திவேல், எம்.ஏ. சி.இக்பால், கே.சிவராசா, ஆர். யோகேந்திரநாதன் முதலியோர் நிற்கின்றனர். இவர்களோடு அன்றைய அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர். டி.டி.பெரேரா, கட்சியின் நெருங்கிய நண்பரான தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணம் வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம். முத்தையா ஆகியோரும் நிற்கிறார்கள். தோழர் சுப்பிரமணியம் சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துநீதி ஓங்கட்டும். எனத் தனது சிம்மக் குரலால் முழக்கமிட்டு ஊர்வலத்தைத் தொடக்கி வைக்கிறார். ஊர்வலம் சங்கநாதம் கிளப்புகிறது. புரட்சிகர முழக்கங்கள் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக வானைப் பிழக்கின்றன. முன்னே செம்பதாகை பின்னே செங்கொடிகள். தலைவர்களில் தோழர்கள் மணியம், சூடாமணி ஆகியோர் செஞ்சட்டை அணிந்திருந்தனர். டாக்டர் சீனிவாசகம் தனது வழமையான சிகப்பு மப்பிளர் கழுத்தில் அணிந்திருக்கிறார். ஊர்வலம் நகர்கிறது. கந்தரோடை வீதியால் வந்து சுன்னாகம் சந்தியில் யாழ் நகர் நோக்கித் திரும்புகிறது. நேரிய காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தின் முன்பாக பொலீஸ் படை திரண்டு நிற்பதை ஊர்வலம் காணுகிறது. புரட்சிகர உணர்வும் போராட்ட முழக்கங்களும் பன் மடங்காகின்றன. மேலும் உத்வேகத்துடன் ஊர்வலம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் காக்கிச் சட்டைகளும் செஞ்சட்டைகளும் மோதிக் கொள்ளப் போகின்றன. எதிர்ப்புறத்தில் குண்டாந்தடிகள் கவசத் தொப்பிகள் தடுப்புக்களுடன் ஒரு பகுதி பொலீஸ். கண்ணீர் புகைக் குண்டுகளுடன் மற்றொரு பகுதியினர் அதற்கும் அப்பால் துப்பாக்கி ஏந்திய பிரிவினர் இவர்களுக்கு கட்டளையிட உயர் அதிகாரிகள்.

இவர்கள் தடைவகுத்து அணி திரண்டிருந்த பொலீஸ் நிலைய வாசலை ஊர்வலம் சென்றடைகிறது. உயர் அதிகாரி ஒருவர் வந்து கலைந்து செல்லுமாறு கூறுகிறார். தோழர் மணியம் மறுத்துரைக்கிறார். இது எமது உரிமை. நாம் ஊர்வலம் சென்றே தீருவோம் என அழுத்திக் கூறுகிறார். பின்னால் இருந்து அடக்குமுறை ஒழிக! சாதி வெறி ஒழிக! சாதி வெறியருடன் பொலீஸ்! என மக்கள் புரட்சிகர முழக்கமிடுகின்றனர். அடுத்த கணம் அடித்துக் கலையுங்கள் என உரத்து ஒரு அதிகாரி உத்தரவிடுகிறார். கண் மண் தெரியாது பொலீஸ் படை பாய்ந்து தாக்குகிறது. தலைமை தாங்கிச் சென்ற தோழர்கள் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். தோழர்கள் மணியம், வீ.ஏ.கந்தசாமி, சூடாமணி, சீனிவாசகம், எஸ்.ரி.என்.டானியல், செந்திவேல் முதலியோர் குண்டாந்தடித் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். சூடாமணி பலத்த அடி தாங்க முடியாது பொலீஸ் அடக்கு முறை ஒழிக என முழக்க மிட்டு வீதியில் சரிந்து வீழ்கிறார். அவரையும் கடந்து பொலீஸ் காட்டுமிராண்டித் தனமான தனது தாக்குதலை ஊர்வலத்தின் மீது நடாத்தியது. தோழர்களின் மண்டைகள் உடைந்து இரத்தம் பாய்கிறது.

## 'இவர்' யார் ?



அமெரிக்கா ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிய மாட்டோம் என்ற உறுதியுடன் இருக்கும் கியூப மக்களுக்குத் தலைமை தாங்கி வருகிறார். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உலக மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவராக இருக்கிறார்.

'நான் ஒரு மாக்சிஸ்ட் - லெனினிஸ்ட் இறக்கும்வரை நான் அவ்வாறே இருப்பேன்'' இவ்வாறு ஆட்சி அதிகாரத்திற்கு வந்தப் பிறகு 1961 டிசம்பர் 2 ஆம் திகதி தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று பிரகடனப்படுத்திய முதலாவது தேசிய விடுதலைப் போராளி.

'பல்கலைக்கழகத்தில் பயிலும்போது நான் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருக்கவில்லை. ஏனெனில், கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான பிற்போக்குத்தனமான ஏகாதிபத்திய பிரசாரத்தினால் நான் பாதிக்கப்பட்டிருந்தேன். நான் அதிகாரத்துக்கு வந்தப் பிறகுதான் ஒரு மாக்சிஸ்ட் - லெனினிஸ்ட்டாக வளர்ச்சியடைந்தேன்' என்று தன்னைப் பற்றி சுயவிமரிசனம் செய்து கொண்டார்.

இவர்தான் சர்வாதிகாரிகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான கியூப மக்களின் போராட்டத்திற்கு தலைமை தாங்கி கியூபாவை விடுதலை செய்வதிலும் சோஷலிஸ கியூபாவை கட்டியமைப்பதிலும் முக்கிய பங்களிப்பை செய்தவராவார்.

தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்தும் முதலாளித்துவமிடமிருந்தும் கியூபாவையும், கியூப மக்களையும், கியூப சோஷலிஸத்தையும் பாதுகாப்பதிலும் முக்கிய பங்களிப்பை செய்து வருபவருமான இவர்தான் தோழர் ஃபிடல் கஸ்ரோ ரூஷ்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு முன்னரே (கொர்பச்சேவ்விடம்) சோவியத் யூனியனின் பிழைகளை எடுத்துக் கூற தவறவில்லை. கியூபாவின் வளர்ச்சிக்காக சோவியத் யூனியன் செய்த உதவிகளை நன்றியுடன் நினைவு கூறும் இவர், சோவியத் யூனியனை வணக்கத்துக்குரியதாக உருவகப்படுத்தியதை கியூபா செய்த தவறுகளில் ஒன்றாக இவர் அடையாளம் கண்டுள்ளார்.

இவர் 1926 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி கியூபாவின் ஓரியன்ட் மாகாணத்திலுள்ள பிரானில் பெரியதொரு நிலச்சுவாந்தரின் குடும்பத்தில் பிறந்தார். இவர் ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் படித்து பட்டம் பெற்றார். இவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஊழலுக்கு எதிரான மாணவ நடவடிக்கைகளில் ஈடுபட்டார். கியூப மக்கள் கட்சி (பாரம்பரிய கட்சி என்று அறியப்பட்டிருந்தது)யின் உறுப்பினராக இருந்தார். அக்கட்சியின் இடதுசாரி அணிக்கு தலைவராக இவர் 1947 இல் தெரிவு செய்யப்பட்டார். டொமியன் குடியரசின் சர்வாதிகாரி டிருஜில்லோவிற்கு எதிரான விரைவுபடுத்தப்பட்ட ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

மாணவர் காலத்தில் கொலம்பியாவுக்கு சென்று ஏகாதிபத்தியத்திற்கு எதிரான லத்தீன் அமெரிக்க மாணவர் சபையை அமைக்க பாடுபட்டார். கொலம்பியாவில் 1948 இல் இடம்பெற்ற பொகோட்டா எழுச்சி இயக்கத்தில் கலந்து கொண்டார்.

1952 மார்ச் 10 ஆம் திகதி சதியை அடுத்து அமெரிக்க உதவியுடன் அதற்கு சார்பாக புல்சென்ஷியோ பெட்டிஸ்டா கியூப ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினான். சர்வாதிகாரி பெட்டிஸ்டாவிற்கு எதிராக புரட்சிகர கிளர்ச்சியில் ஈடுபட்டார். 1953 யூலை 26 ஆம் திகதி சந்தியாகோவில் அமைந்திருந்த மொன்காடா இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு தலைமை தாங்கினார்.

பிரசித்திப் பெற்ற அந்த தாக்குதல் வெற்றியளிக்கவில்லை. இவரும் ஏனைய 24 பேரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். அத்தாக்குதலை அடுத்து கைது செய்யப்பட்ட 60 க்கு மேற்பட்ட புரட்சிவாதிகளை பெட்டிஸ்டாவின் இராணுவம் கொலை செய்தது.

இவர் தனக்கெதிரான விசாரணையில் எடுத்துரைத்த விடயங்களையும், தொகுப்புரையையும் 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்ற தலைப்பில் சிறையில் இருந்து கொண்டே வெளியிட்டார்.

அந்நூலில் வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டே 1954 யூலை 26 இயக்கம் நடத்தப்பட்டது. இதுபோன்ற மக்கள் இயக்கங்களினால் இவரும் இவரின் தோழர்களும் 1955 மேயில் விடுவிக்கப்பட்டனர். 15 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதும் மக்கள் இயக்கங்களினால் 22 மாதங்களில் விடுவிக்கப்பட்டனர்.

1955 யூலை 7 ஆம் திகதி மெக்சிக்கோவுக்கு சென்று கியூப அரசுக்கு எதிரான கெரில்லாப் படையை கட்டினார். 1956 டிசம்பர் 2 ஆம் திகதி 81 கெரில்லா வீரர்களுடன் கியூபாவுக்கு வந்தார். அந்த கெரில்லா படையில் இவரின் சகோதரர் ராவுல் கஸ்ரோ சே குவேரா, கமிலோ சீன், பியூகோஷ், யுவான் அல்மெய்டா, ஜீசஷ்மொன்டானே ஆகியோரில் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது,

இரண்டு வருட காலத்திற்கு கிளர்ச்சிப் படையின் தலைவராக இருந்தார் 1958 இல் சியரா மஸ்ரா மலைப்பகுதிகளில் இருந்து புறப்பட்ட கெரில்லாப் படை பல வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டது.

இத்தாக்குதல்களினால் 1959 ஜனவரி முதலாம் திகதி சர்வாதிகாரி பெப்டிஸ்டா நாட்டை விட்டு ஓடினான். அத்துடன் மக்கள் பல ஆர்ப்பாட்ட இயக்கங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபட்டனர். புரட்சி வெற்றி பெற்றது. 1959 பெப்ரவரி முதல் 1976 டிசம்பர் வரை இருந்தார். பின்னர் கியூபாவின் ஜனாதிபதியானார். அன்று முதல் ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

1965 இல் கியூப கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை அதன் முதல் செயலாளராக இருந்து வருகிறார்.

நன்றி - நூலகத்திட்டம்



# புலம் பெயர் நாடுகளில் ஈழத்தமிழர் வாழ்வுப் பிரச்சினைகள்

ஜேர்மனியில் சோலிங்கன் என்னும் இடத்தில் அகதிமுகாம் ஒன்று புதிய நாஜிகளினால் எரிக்கப்பட்டு வெளிநாட்டவர்கள் பலர் தீக்கிரையாக்கப்பட்ட கொடிய நிகழ்வை அகதி வாழ்வை தரிசித்தவர்கள் இன்னும் மறந்து இருக்கமாட்டார்கள்.

இதேவிதமான சம்பவங்கள் சில குறைந்த அளவு உயிர்சேதங்களுடன் சுவிசிலும் இன்னும் சில வேறு நாடுகளிலும் இடைக்கிடையே நிகழ்ந்துள்ளன.

போக்குவரத்தின் போதும் புகையிரத நிலையங்களிலும் தமிழர்கள் பலர் அடிக்கடி தாக்கப்பட்டனர்.

கறுப்பர்கள், ஊத்தைகள், குளிப்பதில்லை, திருடர்கள் என்று பல வகைகளில் நாம் நகைக்கப்பட்டோம் நிறவெறிக்கு உட்படுத்தப்பட்டோம்.

இவ்விதமாக எமது ஆன்மாவை கொல்லுகின்ற நிகழ்வுகளினால் அடிக்கடி மனம் உடைந்து துயரப்பட்டதெல்லாம் பழைய செய்திகள்தாம்.

ஆனாலும் இன்னும் இச்செய்தியைப் புதுப்பிக்கும் வகையில் இடைஇடையே சம்பவங்கள் நிகழாமல் இல்லை.

1995 டிசம்பரில் கொண்டுவரப்பட்ட ஒருவித சட்டத்தினூடாக சுவிற்சர்லாந்தில் நிறவெறித் தொல்லைகள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எம்மவர்களுக்குள் நடைபெறும் சண்டைகளும்) இந்நிலைமைகளில் மிகவும் சோகம் தரும் விடயம். தமிழர்கள் தமிழர்களினால் கொல்லப்படும் சம்பவங்களும் நிகழ்வதுண்டு. சென்ற மாதம் (ஆகஸ்ட்) 9 ம் திகதி ஜேர்மனில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற கிறிஸ்தவ தேவாலயத்தில் சிறீ என்று அழைக்கப்படும் 29 வயது உடைய ஜெகநாதன் ஜெயகுமார் என்னும் வாலிபர் தமிழ்க்காடையர் குழு ஒன்றினால் வாளால் வெட்டி கொல்லப்பட்டுள்ளார்.

ஈழத்தமிழரின் புலப்பெயர்வு 1980, 81 ல் ஆரம்பித்த போதும் 1983 கறுப்பு யூலையுடன் தான் அது தீவிரம் பெற்றது. 83 க்கு முந்திய புலப் பெயர்வில் சிறிலங்கா அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிடிக்குள் உட்பட்டு வெளியேறியவர்களும், அச்சட்டத்தில் இருந்து தப்ப முற்பட்டவர்கள் சிலரும், உண்மையில் அரசியல் தஞ்சம் கோரி வெளிவந்த போதும், பொருளாதார சுபீட்சைத்தை நாடி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஓடி வந்தவர்களே அதிகம்.

1983 கறுப்பு யூலையின் அனர்த்தங்களினால் வாழ வழி தெரியாது திகைத்துப் போனவர்களும், அரசுப்படைகளின் தேடுதல் வேட்டைகளுக்கு இலக்காகி விடுபட்டவர்களும், தேடுதல்களுக்கு உட்பட்டவர்களுமாகி சிறு தொகையினர் நீங்கலாக அனைவரும் அகதிநிலைகட்குட்பட்டு புலம்பெயர்ந்தவர்களே!

இவர்கள் மேற்கு ஐரோப்பாவுக்கு மட்டுமன்றி கனடா, அவுஸ்திரேலியா என்று உலகின் பலபாகங்களுக்கும் விரிந்து சென்றனர். 1985 ற்கு பின் 1987 இந்திய ராணுவத்தின் வருகைக்கு பின்புவரை வெளியேறிய இன்னொரு பகுதியினரும் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் தமிழ் ஈழுவிடுதலை இயக்கங்களில் இருந்து முரண்பட்டவர்களும் இயக்க மோதல்களிலும், இயக்கங்களின் உட்கொலைகளில் இருந்தும் தப்பமுற்பட்டவர்களே அடக்கம்.

1985 ற்கு முன்புவரை புலம் பெயர்ந்தவர்களில் அதிகமானோர் குறிப்பிட்ட சில மாதங்களிலோ அல்லது ஒரு சில ஆண்டுகளிலோ நாடு திரும்பும் நோக்கையே இலக்காக் கொண்டிருந்த போதிலும் தமிழர் பிரதேசங்களின் மீதான அரசுப் படைகளின் (சிறிலங்கா, இந்தியா) தீவிர தாக்குதல்களும் இதனால் ஏற்பட்ட பயிற்சிகளும் அவர்களின் நாடு திரும்பும் நோக்கிற்கு தடையாக அமைந்தது. ஆரம்பத்தில் இளந்தலைமுறையைச் சேர்ந்த ஆண்களை மையப்படுத்தி நகர்ந்த புலப்பெயர்வு 85 இன் பின் மனைவி, மக்கள், மணப்பெண்கள், பெற்றார் என்று சமூகத்தின் பல பிரிவினரையும் உள்ளிழுத்துக் கொண்டது.

> கிழமைக்கு ஒரு முறையோ மாதத்திற்கு ஒருமுறையோ வரும் கடிதங்களைக்கூட மிகவும் அச்சத்துடன் விரிக்க வேண்டி இருக்கின்றது. எந்த இடத்தில் எந்தத் தாக்குதலில் அண்ணனோ, தம்பியோ, தங்கையோ பலியாகிய செய்தி வந்துவிடும் என்ற பயம் அல்லது எந்த செல்லடியில் எந்த உயிர் பலியாகியதோ என்ற அச்சம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் எமது கடந்த கால நிலைமைகள் மிகவும் பரிதாபத்திற்கு உரியதாகவே இருந்தது.

பூகோளரீதியிலும், சமூகரீதியிலும் முற்றிலும் மாறுபட்ட பனிச்சேற்றுக்குள் எம்மைப் புதைத்துக் கொண்டது போன்ற உணர்வுடன் தான் வெளிநாடுகளில் எமது அகதி வாழ்வு ஆரம்பித்தது.

மேற்கு ஐரோப்பிய நாட்டவர்க்கு (குறிப்பாக ஜேர்மன், நெதர்லாந்து, சுவிற்லாந்து) ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்களை ஏற்கனவே அறிமுகமாக இருந்தது. ஆனால் எமது நிறம் அவர்களுக்கும் மிகவும் அந்நியமாக இருந்தது. இவ்வித வெறுப்புணர்வுகள் 'எமது நாடு திரும்ப வேண்டும்' என்ற உணர்வுக்கு தீனி போட்டுக் கொண்டிருந்தது.

எமது இருப்புக்குக் கிடைத்த தொல்லைகள் புதிய நாஜிகளின் நடவடிக்கைகளினாலும், நிறவெறித் தாக்குதல்களினாலும் மட்டும் ஏற்பட்ட ஒன்றல்ல. சிவில் சமூகத்திடையே எமது சமூகப் பண்புகளும், பழக்கவழக்கங்களும் (பலத்த குரலில் பேசுதல், வீடுகளுக்கு அடிக்கடி விருந்தினராக போகுதல், இரவு நேரங்களில் 12 மணிக்கு மேல் ரிவி பார்த்தல், பாட்டுக்கேட்டல், சமையல் மணங்கள்) மிகவும் அந்நியப்பட்டு இருந்தது. எமது தீவிரமான வருகை இந்நாட்டு அரசுகளிடையே பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியது. இதனால் சிறிலங்கா அரசின், அரசுப் படைகளினால் தனிப்பட்ட பிரச்சினைகள் எதற்கும் ஆட்படவில்லை என்று கூறி, அகதி அந்தஸ்துக்கு கோரிய எமது விண்ணப்ப படிவங்களை நிராகரிக்கத் தொடங்கியது. நிராகரிப்பு கடிதங்களை அடிக்கடி அனுப்பி தொல்லைப்படுத்தியது. ''நாட்டுக்கு அனுப்பப்படுவர்' என்று பீதியை உண்டு பண்ணியது. இன்றைய கொம்பியூட்டர் யுகத்தில் இவ் நிராகரிப்புத் தொல்லைகள் ஆகக்கூடியது 'மூன்று மாதத்திற்குள் வந்து விடுகிறது.

தாய் மண்ணில் வாழும் எமது சொந்தங்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் வசதியான நிம்மதியான வாழ்வைத் தரிசிப்பவர்கள் என்று அர்த்தம் கொள்வது இயல்பே. இந்நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்திற்கு ஒப்பான வாழ்வை நாம் வாழ முற்படுவோமாக இருந்தால் இந்நாடுகளின் கிடைக்கும் ஊதியம் எமது வாழ்வுக்குப் போதியதாக அமைந்து விடாது என்பதே உண்மையாகும். பொதுவாக ஒரு பிள்ளைக்கு (சின்னதோ பெரிதோ) ஒரு அறை என்ற விதத்தில் தான் வீடுகளை வாடகைக்கு அமர்த்துகிறார்கள் இந்நாட்டவர்கள். ஆனால் எம்மவர்களோ 2 அல்லது 3 பிள்ளைகளுக்கு ஒரு அறை என்ற அளவில்தான் வீடுகளை எடுத்துக் கொள்கிறார்கள். இந்நாட்டு மக்கள் விடுமுறை நாட்களை கழிக்கும் முறைகளை நாம் எட்டிகூட பார்க்க முடியாது. சமையல், சாப்பாடுகளிலும் எம்மவர்க்கும் இந்நாட்டவர்க்கும் இடையில் தரவேறுபாடு பலமாகக் காணப்படுவதை மனம் கொள்ளத்தான் வேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக எமது ஆன்மாவைத் தாயகத் தேசத்தில் வைத்துவிட்டு, வெற்றுடல்களுடன் நடமாடும் மனித உடல்கள்தான் இங்கு அதிகம். கூட்டு வாழ்வு முறைக்கு உட்பட்டது தான் எமது தமிழ் சமூகம். ஒரே வீட்டில் பாட்டி, பாட்டன் என்றும் அக்கம் பக்கங்களிலும் அயலிலும் அண்ணன், தம்பி, தங்கச்சி சொந்தம் பந்தம் என்றும் வாழ்ந்து பழக்கப்பட்டுப்போன எமது சமூகம். அந்நிய நாடுகளுக்கு வந்து அறிமுகம் இல்லாத முகங்களை அறிமுகப்படுத்தி கொண்டாலும் முழுமையான மனக்கஷ்ரங்களை பகிர்ந்து கொள்ள முடியாத அளவுக்குத்தான் வாழ்க்கை ஓடுகிறது. இந்நாட்டவர்களை அறிமுகப்படுத்தி கொள்வதற்கு மொழி பெருந்தடையாக இருப்பது இன்னோர் கடினமான விசயம்.

இந்நிலைமைகளில் தாய் மண்ணில் இருந்து கிடைக்கும் சோகச் செய்திகளினால் மனம் உடைந்து விடுகிறது. கிழமைக்கு ஒரு முறையோ மாதத்திற்கு ஒருமுறையோ வரும் கடிதங்களைக்கூட மிகவும் அச்சத்துடன் விரிக்க வேண்டி இருக்கின்றது. எந்த இடத்தில் எந்தத் தாக்குதலில் அண்ணனோ, தம்பியோ, தங்கையோ பலியாகிய செய்தி வந்துவிடும் என்ற பயம் அல்லது எந்த செல்லடியில் எந்த உயிர் பலியாகியதோ என்ற அச்சம். மொத்தத்தில் எவ்வளவுதான் ஓடி ஓடிப் பணம் சேர்த்தாலும் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்த எம்மவர்கள் ஆன்மாவை தொலைத்துவிட்டு வெறும் உடல்களுடன் உலாவுபவர்கள்தான் அதிகம்.

**சுவிஸிலிருந்து லோகதாசன்**

# சாதியமும் பார்ப்பனியமும்

இந்திய சுதந்திரத்திற்கு முந்திய தமிழகத்தில் சாதி வேறுபாட்டுக்கெதிரான முக்கியமான போக்குக்களில் ஒன்று காந்தியின் வழிகாட்டலிலானது. மற்றது பெரியார் (ஈ.வெ.ராமசாமி) வழிகாட்டலிலானது. முன்னையது சாதி ஒழிப்பைப் பூசி மழுப்பி சலுகைகள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களைத் தன்வசமாக்க முயன்றது. இன்னொன்று சாதி முறையின் கொடுமையைத் தெளிவாகவே அடையாளம் கண்டது. ஆயினும் அதன் நடைமுறை, சாதிய அதிகார அடுக்கில் உச்சத்தில் இருந்தவர்களான பிராமணர்களையே பிரதான எதிரிகளாகவும் (சில சமயம் ஒரே எதிரி இனமாகவும்) அடையாளம் கண்டது. இதன் விளைாக பிராமணர் தவிர்ந்த உயர்சாதி ஒடுக்குமுறையாளர்களது சாதியமும் வர்க்கச் சுரண்டலும் புறக்கணிக்கப்பட்டன.

தமிழகத்தின் இடதுசாரி இயக்கம் சாதியத்தையிட்டுக் கொள்கையளவில் சரியான நிலைப்பாட்டை எடுத்தாலும், வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்தும் போக்கில், சாதியத்திற்கு எதிரான இடையறாத வெகுசன இயக்கத்தின் தேவையைத் தவறவிட்டு விட்டது என்றே கூறவேண்டும்.

அப்பேத்கர் இந்துமதம் தாழ்த்தப்பட்டவர்களை ஒதுக்க நியாயம் கற்பிக்கிறது என்ற அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடி காந்தியம் எவ்வாறு உயர்சாதி நலன்களைப் பேணுகிறது என்பதையும் விளக்கினார். ஆயினும் அவரால் சாதியத்திற்கெதிரான தனது நிலைப்பாட்டை அடிப்படையான சமூக மாற்றத்திற்கான ஒன்றாக விருத்தி செய்ய முடியவில்லை. ஈற்றில் அவர் இந்திய முதலாளித்துவத்துடன் சமரசம் செய்ய நேர்ந்தாலும், அவரது பங்களிப்புக் காத்திரமானதே.

தமிழகத்தில் சாதியத்திற்கெதிரான சில முயற்சிகள், பார்ப்பனிய எதிர்ப்பு என்ற பேரில், பார்ப்பன (பிராமண) சாதியாரை மட்டுமே தாக்கும் ஒன்றாகத்தான் செயற்பட்டு வருகின்றன. நடைமுறையில் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் பிராமணரல்லாத உயர் சாதியரால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு (தலித்துக்கள்) இழைக்கப்படும் கொடுமை சார்ந்தவையாக உள்ளன. இவற்றை வர்க்கக் கண்ணோட்டமில்லாமல் அணுகும் போது, சாதி அடிப்படையிலான சிந்தனை மேலோங்கிச் சாதிக் கலவரங்களே வளர வசதியாகின்றது.

ஒடுக்கப்பட்ட சாதியினர் மட்டுமன்றிப் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் பிராமணர்களும் கூடச் சாதிச் சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். சாதிச் சங்கங்கள் தேவையா இல்லையா என்பதை விட, அவை என்ன இலக்கை உடையவை என்பது முக்கியமானது. அவற்றின் இலக்கு சாதியத்தை ஒழிப்பதாயின், சாதி அமைப்புக்கு எதிரான சகல மக்களையும் ஒன்றுபடுத்தும் நோக்குடன் அவை செயற்பட வேண்டும். குறிப்பிட்ட சாதியினரது நலனுக்கு மட்டுமே பணியாற்றுவது என்றாகி விட்டால் சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களைக் கூடப் பிளவுபடுத்தும் காரியமே நடக்கும்.

தமிழகத்தில் பார்ப்பனியம் இல்லை என்று நாம் கூறுவதற்கில்லை. ஆயினும், அது பலவகையான பார்ப்பனியங்களாகவே செயற்படுகிறது. ஒருபுறம் பழமை பேணும் சனாதனிய சிந்தனையாக சங்கர மடம் முதல் தீவிர வைதீக நிறுவனங்களாலும் பேணப்படும் வகை. இந்தப் பார்ப்பனியத்தை விட ஆபத்தான நவீனத்துவமான வடிவம் 'சோ' ராமசாமி போன்றோரால் முன்வைக்கப்படுகிறது. பார்ப்பன சாதியினரது நலன்களை மட்டுமன்றி மேலாண்மையைக் காப்பதற்காக இன்னும் பிற வடிவுகளிலும் செயற்படும் பார்ப்பனியத்தையும் சாதி உணர்வு மிகுந்த ஒரு சமுதாயத்தில் வெறுமனே தன் சாதி அடையாளத்தை உணருகிற ஒரு பார்ப்பனரது நிலையுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஒரு பார்ப்பனரது சாதி அடையாளம் ஒழிவதற்குச் சாதி அமைப்பு ஒழிய வேண்டும். அதுவரை, ஒவ்வொரு சாதிக்குள்ளும் தன் சாதிய அடையாளம் பற்றிய உணர்வு பலவேறு மட்டங்களில் தொடர்ந்தும் நிலவும்.

பார்ப்பனியமும் சாதியமும் ஒன்றே என்பவர்கள் விடுகிற தவறு போலவே பார்ப்பனியமும் பார்ப்பனரும் ஒன்று என்கிற தவறும், அடிப்படையிலான பிரச்சினையைத் தவறவிட்டுவிட்டு வசதியான இலக்கு ஒன்றையே தேடுகின்றன. பார்ப்பன சாதி, இல்லாமலே போய்விடுகிறது என்று (ஒரு பேச்சுக்காக) வைத்துக் கொள்வோம். அத்தோடு பார்ப்பனியம் என்ற பேரில் பார்ப்பனிய எதிர்ப்பாளர்கள் தாக்குகிற யாவுமே ஒழிந்து விடுமா?

தமிழுணர்வும், சுயமரியாதையும் பகுத்தறிவும் சமதருமமும் வெறும் பார்ப்பனிய ஒழிப்பால் வந்துவிட முடியாது. பார்ப்பனியம் எவ்வளவு தான் முக்கியமானதாயினும், சாதியத்தின் ஒரு பகுதியாகவே அது முறியடிக்கப்பட வேண்டும். தங்களுடைய சாதிய உணர்வுகளை மழுப்புவதற்காகப் பார்ப்பனியத்தைத் தாக்குகிறவர்கள் இருக்கிறார்கள். பார்ப்பனியத்தின் பேரைச் சொல்லி, பார்ப்பன சாதியில் பிறந்த எல்லாரையும் நிராகரிக்க வேண்டும் என்கிற மூர்க்கத் தனமும் சிலரால் ஊக்குவிக்கப்படுகிறது. தமிழகம் இவற்றிலிருந்து விடுபட வேண்டும்.

வர்க்கப் போராட்டம் என்பது தேசிய இன ஒடுக்கலையோ ஆணாதிக்கத்தையோ சாதிய ஒடுக்குமுறையையோ புறக்கணித்துச் செயற்பட முடியாது. இவ்விஷயத்தில் இடதுசாரிகள், சரியாக கடக்காவிட்டால், மக்களைப் பிளவுபடுத்தும் சக்திகள் மக்கள் மத்தியில் மேலும் குழப்பங்களை விளைவிக்க வசதியாகிவிடும்.

இந்தப் பார்ப்பன விரோதப் பிரசாரம் தமிழகத்திலிருந்து பார்ப்பனராதிக்கமில்லாத தமிழர் வாழும் பகுதிகட்கும் போய்விட்டது. புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் சிலர் எழுதுகிற பார்ப்பனிய விரோதக் கட்டுரைகள் நம்மைச் சிரிக்க வைக்கின்றன. ஈழத்திலும் இப்போது இதுபற்றிச் சிலர் ஏதேதோ பேசிக் குழம்புகிறார்கள். தமிழகத்தில் உள்ளவர்கள் பின் நவீனத்துவம் அது இது என்று பேசிக் குழம்புகிற மாதிரி இவர்களும் தமக்குத் தொடர்பற்ற எதையோ தொடர்பானதாகக் கொண்டு குழம்புவது ஏனோ தெரியவில்லை.

**இ.தி.கோணாமலை**

நன்றி - நூலகத்திட்டம்



# குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்

✱ கடந்த செப்டம்பர் 19 ம் 28 ம் திகதிகளில் முறையே நல்லூர் கந்தசாமி கோவிலிலும் யாழ். புனித யுவானியார் தேவாலயத்திலும் குடாநாட்டில் காணாமல் போனோர் பற்றிக் கேள்வி எழுப்பும் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. முதல் சத்தியாக்கிரகத்தில் 500 பேரும் அடுத்ததில் சுமார் ஆயிரம் பேரும் கலந்து கொண்டனர். எழுநூறுக்கு மேற்பட்டோர் இதுவரை குடாநாட்டில் காணாமல் போய் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பெற்ற வயிறு பற்றி எரிகிறது' 'எமது பிள்ளைகளுக்கு தந்தைமார் வேண்டும்' 'எமது பிள்ளைகளை எங்களுக்குக் காட்டுங்கள்' 'நீங்கள் பிள்ளைகளைப் பெறவில்லையா?' 'உங்களுக்கு சகோதரர்கள் இல்லையா?' போன்ற உருக்கமான கேள்விகளையும் மனக்குமுறல்களையும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டோர் கண்ணீர் பெருக்குடன் கேட்டுப் புலம்பி அழுவதைக் கேட்க முடிந்தது. அந்தக் காட்சி கல்நெஞ்சம் படைத்தவர்களையும் கூட கண்கலங்கச் செய்வது போல் அமைந்திருந்தது.

✱ குடாநாட்டில் தற்போது ஒரு காட்டிக் கொடுக்கும் படலமே இடம் பெற்று வருகின்றது. ராணுவத்திடம் பல்வேறு சலுகைகள் வருவாய்கள் பெற்று தொழில் ரீதியாகக் காட்டிக் கொடுப்போர் ஒரு புறம் இருக்கிறார்கள். அதேவேளை தத்தமது சொந்தக் குரோதங்களை மறைமுகமாகத் தீர்த்துக் கொள்ள தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ராணுவத்திடம் காட்டிக் கொடுக்கிறார்கள். புலிகளுக்குப் பணம் கொடுத்தவர், சாப்பாடு கொடுத்தவர், பங்கர் வெட்டியவர், தங்க இடம் கொடுத்தவர் என மகஜர் அனுப்பும் மகான்கள் குடாநாட்டில் தோன்றி தமது கைவரிசைகளைக் காட்டி வருகிறார்? இதனால் ஒன்றுமறியாத பலர் படுமோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சும்மா வாய் சப்புறவனுக்கு அவல் கிடைத்தது போல் ராணுவத்தின் கையில் அப்பாவிகள் அகப்பட்டு வேதனை மேல் வேதனைகள் அனுபவித்து வருகின்றனர். எப்போதுதான் இந்த எட்டப்பர் கூட்டம் ஒயுமோ தெரியவில்லை.

✱ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இரண்டு வருடமாக இருந்து வந்த அதிபர் நியமன இழுபறி அண்மையில் முடிவுக்கு வந்து புதிய அதிபர் நியமனம் பெற்றுள்ளார். யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக வருவதற்கு புறத் தகுதி அகத் தகுதி என்ற இரண்டும் பொருந்தி வர வேண்டும். புறத் தகுதி நூற்றுக்கு நூறு இருந்தாலும் அகத் தகுதியே அதிபர் நியமனத்தை இறுதியாகத் தீர்மானிக்கும். புறத்தகுதி உரிய கல்வித் தகமை அனுபவம், ஆளுமை என்பதாகக் கொள்ளலாம். ஆனால் அகத் தகுதி என்பது கலப்பற்ற உயர் சைவ வேளாளனாகவும் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாகவும் அமைந்திருந்தல் வேண்டும் என்பது ஒரு எழுதா விதியாகும். அந்த விதிக்கமையவே இடையில் நியமிக்கப்பட்ட அதிபர் கழற்றப்பட்டு புதிய அதிபர் மேற்கூறிய தகுதிகளுடன் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிய வருகிறது.

✱ குடாநாட்டில் திருவிழாக்கள் கலகலப்பாக இடம் பெற்று வருகின்றன. மக்களுக்கு ஒன்றுகூடவும் சிறிது ஆறுதல் பெறவும் உள்ள ஒரே இடம் கோவில் திருவிழாக்கள் தான். நல்லூர், செல்வச் சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் திருவிழாக்களில் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். ஆனால் அவை எல்லாம் குடா நாட்டின் இயல்பு வாழ்க்கையின் உச்சப் பிரதிபலிப்பு என்று காட்ட அரசாங்க ஊடகங்கள் முயற்சிப்பது தான் விசனத்திற்குரியதாகும்.

8ம் பக்கத் தொடர்...

## ஒரு புரட்சிகர எழுச்சி...

வீதியில் தோழர்களின் இரத்தம் கொட்டுகிறது. தோழர்கள் கே.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, இ.கா. சூடாமணி ஆகியோரை இழுத்துச் சென்று சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் பூட்டி வைக்கிறது பொலீஸ்.

இத்தகைய கடுமையான தாக்குதல்களுக்கு முகம் கொடுத்த மேற்படி ஊர்வலம் எவ்வகையிலும் அஞ்சி கலைந்து ஓடிவிடவில்லை. மீண்டும் ஒன்று திரண்டு நிற்கிறது. தமது தாக்குதலுடன் கலந்து சென்று விடுவார்கள் என எதிர்பார்த்த பொலீஸ் அதிகாரிகள் திரண்டிருந்த மக்கள் முன்னிலைக்கு வந்து கலைந்து வந்து கலைந்து செல்லுமாறு மீண்டும் கேட்கிறார்கள். ஆனால் அவ்வாறு கலைந்து செல்ல மறுத்த ஊர்வலத்தினர் மத்தியில் உள்ள கட்சித் தலைமைத் தோழர்கள் பொலீஸ் அதிகாரிகளுடன் பேசுகின்றனர். யாழ் முற்றவெளியில் இடம் பெற உள்ள பொதுக் கூட்டத்திற்குத் தாம் எப்படியும் சென்றடைய வேண்டும் என எடுத்துக் கூறுகின்றனர். ஊர்வலத்தில் திரண்டிருந்த மக்களினதும் தலைவர்களினதும் உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக வேறு வழியின்றி இறுதியில் யாழ் நகர் நோக்கி ஊர்வலத்தில் திரண்டிருந்த மக்கள் முழக்கம் ஆர்ப்பாட்டமின்றி நடந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். ஊர்வலத்தினர் மாலை ஆறரை மணியளவில் யாழ் நகருக்குள் புகுகின்றனர். யாழ் சிவன் கோவிலடியை அடைந்ததும் மீண்டும் முழக்கங்களை ஆரம்பிக்கின்றனர். ஊர்வலத் தாக்குதல்கள் பற்றி அறிந்து மேலும் பலநூற்றுக் கணக்கான மக்கள் வந்து கொண்டிருந்த ஊர்வலத்துடன் கலந்து சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என்ற புரட்சிகர முழக்கத்துடன் சங்கமிக்கின்றனர். உயர்ந்த கட்ட புரட்சிகர உணர்வுடன் ஊர்வலம் யாழ் முற்ற வெளியை இரவு ஏழு மணியளவில் சென்றடைகிறது.

யாழ் முற்ற வெளியில் கொட்டும் மழையின் மத்தியிலும் செங்கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகிறது. ஐயாயிரத்திற்கு அதிகமான மக்கள் அக் கூட்டத்தில் திரண்டிருந்தனர். கட்சியின் அன்றைய பொதுச் செயலாளர் தோழர் நா.சண்முகதாசன் சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்களை நோக்கி கட்சியின் அறைகூவலை முன்வைத்து உரையாற்றுகிறார். அவரைத் தொடர்ந்து வாலிபர் இயக்கத்தின் அன்றைய வட பிரதேச இணைச் செயலாளர்களில் ஒருவரான தோழர் சி.கா.செந்திவேல் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான புரட்சிகரப் போராட்டத்தில் இளைஞர்கள் யுவதிகளின் பங்களிப்பை உறுதிப்படுத்தி உரையாற்றுகிறார். தோழர் கே.டானியல் போராட்டத்தின் தவிர்க்க முடியாத தேவை பற்றி தனது உரையில் எடுத்துக் கூறுகின்றார். இரவு ஒன்பது மணியளவில் அப்புரட்சிகர பொதுக் கூட்டம் நிறைவு பெறுகிறது.

அன்று சுன்னாகத்தில் வீழ்ந்த அடி அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமை குடிமை முறையின் கீழ் கிடந்த ஐந்து லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும் வீழ்ந்த அடியாக மாறியது. அவர்களை விழித்தெழ வைத்தது. வீறார்த்த புரட்சிகர வெகுஜனப் போராட்டத்தில் குதிக்க வைத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நிதானமான போராட்டங்கள் முன்சென்றன. குறிப்பிடத்தக்களவு தீண்டாமைக் கொடுமைகளுக்கு முடிவு கட்டப்பட்டது. ஆனால் சாதிய அமைப்பும் தீண்டாமைச் சிந்தனையும் முற்றாக அழிக்கப்படவில்லை. தொடர்ந்தும் போராட வேண்டியே உள்ளது. அக்கடமை மேலும் புரட்சிகரப் பாதையில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

-வெகுஜனன்

## கிழக்கில் தொடரும் கொடுவதைகள்!



இன்று வடக்கு கிழக்கில் யுத்தமும் அதன் கொடூர விளைவுகளும் நாளாந்தம் மக்களால் அனுபவிக்கப்படுகின்றன. அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் யுத்த சூழலில் கொடுவதைகள் தொடராக இடம் பெற்று வருகின்றமையைக் காண முடிகிறது. கிழக்கில் ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி அல்லாத பகுதிகள் என உண்டு. அல்லாத பகுதிகளில் புலிகள் இயக்கம் தனது செயற்பாட்டைக் கொண்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவம் பொலீஸ், ஊர்காவல் படை ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்கள் என்பன பகிரங்கமாகவே ஆயுதங்களுடன் உள்ளனர். இவற்றை விட மறைமுகமாக ஆயுதம் வைத்திருக்கும் அடையாளம் காட்டாத நபர்கள் கோஷ்டிகளாகவும் உள்ளனர். இத்தனை ஆயுதங்களுக்கும் மத்தியில் தான் கிழக்கு மக்களின் அன்றாட வாழ்வு நகர்ந்து செல்கிறது. மேலும் தமிழ் முஸ்லிம் சிங்கள இன மதப் பிரிவு அடிப்படையில் இவ் ஆயுதங்கள் அடிக்கடி பேசிக் கொள்கின்றன. அதனால் அனர்த்தங்களுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் மக்களாகவே உள்ளனர். ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது செயல்களுக்கு நியாயங்களைக் கூறிக் கொள்கின்றனரே தவிர மக்கள் அனைவரையும் மனிதர்களாகக் காணும் திறன் எவரிடமும் இல்லை.

இன்றைய யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல ஆயுதத் தரப்பினரும் பரஸ்பரம் கொல்லப்படுகின்றனர். அவ்வாறு கொல்லப்படும் போது ஒருவர் சிங்களவராகவே அன்றி தமிழராகவோ, முஸ்லீமாகவோ தான் இருப்பார். ஆனால் பழிக்குப் பழிபோல ஆயுதம் அற்ற அப்பாவி மக்கள் மீது திடீர் தாக்குதல்கள் தொடுக்கப்படுவது கிழக்கில் சகஜமாகியுள்ளது. பழிக்குப் பழியாகப் பல உயிர்களை கொன்றொழிப்பதும் கடைகள் கட்டிடங்கள் தொழில் உபகரணங்கள் போன்றவற்றை அழிப்பது போன்ற இழி செயல்கள் யாவும் இடம் பெறுகின்றன. அண்மைய உதாரணம்தான் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டமைக்குப் பழி தீர்த்துக் கொள்வதற்காக அம்பாறை சென்றல் காம்ப் பகுதியின் நாலாம் கொலனி மக்கள் படுவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்கள் அடைந்தனர். 160 வீடுகள் கொழுத்தி எரிக்கப்பட்டன. அப்பகுதி மக்கள் அனைவரும் அகதிகளாக்கப்பட்டனர். அன்றாட வாழ்க்கைக்கே மல்லாடிக் கொண்டுள்ள அப்பகுதி மக்கள் இன்று எதுவுமற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். சென்றல் காம்ப் பொலிஸாரே இந்த அட்டூழியம் புரிந்துள்ளனர் எனப் பொது மக்கள கூறியுள்ளனர். அரசாங்கம் கண்துடைப்பு நடவடிக்கையாக இடமாற்றம் வழங்கியுள்ளதாகக் கூறுகிறது.

ஏற்கனவே பல தடவைகள் இப்பகுதியில் சம்பவங்கள் மக்களுக்கு எதிராக இடம் பெற்று வருகின்றன. இப்பகுதியில் தான் கோணேஸ்வரி என்ற குடும்பப் பெண் அநாகரிகமாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்டார்கள்.

அண்மையில் கிழக்கில் முஸ்லிம் மீனவரின் படகுகள் கட்டுமரங்கள் ஆயுதக் குழு ஒன்றினால் எரிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. அடிக்கடி தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையிலான கலவரங்கள் திட்டமிட்ட வரையில் தோற்றுவிக்கப்படுகின்றன.

இவை மட்டுமன்றி அண்மையில் மதுபானத்தில் நஞ்சு கலக்கப்பட்டதன் மூலம் அறுபது பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் கடும் பாதிப்பை அடைந்தனர்.

இவ்வாறு இன்றைய யுத்த சூழலில் கிழக்கின் மக்கள் நாளாந்தம் ஏதாவது ஒரு சம்பவத்தின் மூலம் கொடுவதைகள் அனுபவிக்கும் மக்களாக்கப்பட்டுள்ளனர். இந்நிலை நிறுத்தப்படுவதற்கு யுத்தம் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். நியாயமான அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும். அதுவே கிழக்கில் இடம் பெற்றுவரும் கொடுவதைகளுக்கு முற்றுப்புள்ளியை ஏற்படுத்தும்.

நன்றி - நூலகத்திட்டம்



- இ.தோ.கா.வின் பிச்சை ....
- ''அங்கே புலிகள் இங்கே நீங்கள்'' ......
- மாக்குடுகல பாடசாலைக்கு காணி வேண்டும்....
- பொலிசாரின் இம்சைக்குள்ளாகும் கணிக்கா மக்கள்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார். 6 மணிக்குப் பிறகு 10.15 கிலோ மீற்றர் தூரமுள்ள நகரத்துக்கு சென்று பொருள்களை வாங்க முடியாது என்பதாலேயே அவர் அவ்வாறு கேட்டுள்ளார்.

அப்போது வடக்கில் புலிகளின் பிரச்சினை இங்கு உங்களின் பிரச்சினை என்று தோட்டத்துரை சிங்களத்தில் கூறியுள்ளார். அவ்வேளை அவருடன் அங்கு வந்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அத்தொழிலாளியை தாக்கியுள்ளார்.

அதற்கு எதிர்ப்பை தெரிவிக்குமுகமாக தொழிலாளர்கள் சம்பளத்தை வாங்க மறுத்து விட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு அட்டன் பொலிசாரின் உதவியுடன் சமாதானம் செய்யப்பட்டு சம்பளம் கொடுக்கப்பட்டது.

ஆனால் அச்சம்பவத்திற்குப் பிறகு பன்னீர் என்ற அந்த தொழிலாளிக்கு வேலை நிறுத்தப்பட்டுள்ளது. தோட்டத்துரையை ஏசினார் என்பதே வேலை நிற்பாட்டப்பட்டதற்கு காரணமாக கூறப்படுகிறது.

பன்னீரை தாக்கியதற்கு எதிர்ப்பை தெரிவித்த சகதொழிலாளிகள் பன்னீருக்கு மீண்டும் வேலையை பெற்றுக் கொடுக்கவும் முன்வரவேண்டும்.

* * * * *

கந்தப்பொளை மாக்குடுகல தோட்டப்பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் தோட்டக் காணி இன்னும் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை.

மேற்படி காணியை பாடசாலைக்கு வழங்குவதை தோட்டப் பெரியோர்கள் சிலர் எதிர்த்து வருகின்றனர். 2 ஏக்கர் காணியை பாடசாலைக்கு கொடுத்தால் அத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைந்து விடும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த எதிர்ப்பை காரணம் காட்டி தோட்ட நிர்வாகம் குறித்த காணியை பாடசாலைக்கு கொடுப்பதை தாமதித்து வருகிறது.

2 ஏக்கர் காணி பாடசாலைக்கு கொடுக்கப்படுவதால் வேலைவாய்ப்பு குறையும் என்று கூறுபவர்கள் தோட்டக்காணியில் ஏற்படுத்தப்பட்ட கொலனி குடியேற்றத்தை பற்றியோ கொலனியிலுள்ளோர் சட்டவிரோதமாக தோட்டக் காணியை பிடித்து வருவது பற்றியோ கவலைப்படுவதாக இல்லை.

அதேவேளை மாக்குடுகலை தோட்டத்தில் உயர் விளைச்சல் தரக்கூடிய 7 ஏக்கர் காணி விவசாய செய்கைக்கு பயன்படுத்தப்பட்டு தற்போது கைவிடப்பட்டிருப்பதும் அவர்களுக்கு தெரியவில்லை.

எனவே எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றம் கருதியும், மலையக மக்களின் இனத்துவத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டும் பாடசாலைக்கு அடுத்துள்ள அந்த 2 ஏக்கர் காணியை பாடசாலைக்கு கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் ஒன்றுபட்டு கோரிக்கை விடுக்க வேண்டும்.

ஏனைய பகுதிகளை போன்று இங்கும் பெற்றோர்கள் பாடசாலைக்கு காணியைப் பெற்றுக் கொடுப்பதிலும், பாடசாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய முயற்சிகளை செய்வதிலும் முன்நின்று உழைக்க வேண்டும்.

* * * * * * * * * *

இராகடுலையிலுள்ள கணிக்கா தோட்ட மக்கள் சோதனை என்ற பெயரில் பொலிசாரால் இம்சைக்குள்ளாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இராகலை நகரிலிருந்து பொருட்களை வாங்கிச் செல்லும் அவர்கள் பிரயாணம் செய்யும் வேன்கள் இடைமறிக்கப்பட்டு பொலிசாரால் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். சோதனை செய்யப்படும் போது பலர் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சோதனை செய்பவர்களின் 'எதிர்பார்ப்பை' பூர்த்தி செய்யாதபடியாலேயே மேற்படி சோதனைகளும் வேதனைகளும், இம்சைகளும் இடம் பெறுவதாக கூறப்படுகிறது.

இந்த இம்சைகள் தொடர்பாக மேலிடங்களுக்கு புகார் செய்யப்பட்ட போதும் இம்சைகள் குறைந்த பாடில்லை.

5ம் பக்கத் தொடர்...

## ஒரு மலையக மாணவனின்....

12.09.97 - 26.9.97

திங்கள் வாசிப்பு பாடம் நடைபெற்றது. செவ்வாய் பெரிய வகுப்பு அண்ணன் கணிதம், படிப்பித்தார். புதன் ஸ்கூல் போன போது எங்கும் ஒரே பரபரப்பாகவிருந்தது. பொன்ஸ் சேரை யாரோ இரவு நேரத்தில் அடித்து விட்டதாகவும், தலையில் பத்து தையல் போட்டிருப்பதாகவும், ஒரு கால் முறிந்து விட்டதாகவும் கூறினார்கள். அவர் குடி போதையில் இருந்தமையால் யார் அடித்தது என்று சரியாக அடையாளங் காண முடியாமல் போய்விட்டது என கூறினார்கள். பிரச்சினைக்குரிய அக்காவின் குடும்பத்தினர் தான் அடித்து இருக்க வேண்டும் என பேசி கொண்டார்கள். ஆனால் 'பொன்ஸ்' சேர் அவர்களை சொல்லவில்லையாம். எங்கள பொலிசுல காட்டிக் குடுத்தா உன்ன உயிரோட நெருப்பு வைப்போம் என்று பயமுறுத்தி விட்டார்களோ தெரியாது. இராணித் தோட்ட ஆளுகள பத்தித் தான் இப்பகுதியில உள்ள எல்லாருக்கும் தெரியுமே. என்று சிவலிங்கம் சேர் சிரிப்புடன் சொன்னார். ஒரு பாடமும் நடக்காததால் வெள்ளி வீட்டிலிருந்தேன்.

29.09.97 - 3.10.97

இவ்வாரமும் ஒரு பாடமும் நடக்கவில்லை. சேர்மார் எல்லோரும், ஆசுப்பத்திரிக்கு 'பொன்ஸ்' சேரைப் பார்க்க போய் வந்தார்கள். புதன் அவரை கண்டிக்கு கொண்டு போய்விட்டதாக பேசிக் கொண்டார்கள்.

## மலையகத்தில் ....

(1ம் பக்கத் தொடர்...)

க்கோ, பயிர்களுக்கோ, சூழலுக்கோ பாதிப்பில்லை. இப்பகுதியில் வானத்தில் அவதானிக்கப்பட்ட பொன்மஞ்சள் நிறமான மேகக் கூட்டங்கள் தற்போதைய காலநிலையில் ஏற்பட்டதாகும். அதற்கும் இந்தோனேசிய புகைமூட்டத்திற்கும் தொடர்பில்லை' என்று இயற்கை வள, சூழல் பாதுகாப்பு அமைச்சர் நந்தமித்தி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

காடுகள் எரிக்கப்படுவதாலும் தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேறும் புகையாலும் இந்தோனேசிய சூழல் மிகவும் மோசமாக மாசடைந்துள்ளது. அதனால் அந்நாட்டின் கலிமாண்டான் மாகாணத்தில் மக்கள் சுவாசிக்க முடியாதும், கண்கள் திறக்க முடியாதும் கஸ்டப்படுகின்றனர். அங்கு வானத்தில் மாசடைந்த மேகங்கள் காணப்படுகின்றன. எங்கும் நச்சுப் புகைமூட்டம் இருக்கிறது. புகை மூட்டத்தில் பகல் இருண்டதாக இருக்கிறது.

புகைமூட்டத்தால் இருண்டதாக இருந்ததாலேயே அண்மையில் இந்தோனேசியாவில் விமானமொன்று விபத்துக்குள்ளாகியது. அதில் பிரயாணம் செய்த 234 பேரும் பலியாகினர். என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியாவில் மிக வேகமாகவும், அதிகமாகவும் சூழல் மாசடைந்து வருவதால் தென்கிழக்காசிய பிராந்தியம் முழுவதுமே ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

இலங்கை சூழல் பாதுகாப்பு அதிகார சபையும், அமைச்சரும் கூறுவது போன்று இந்தோனேசிய சூழல் மாசடைவதால் இலங்கைக்கு நேரடியாக பாதிப்பு இல்லாமல் இருக்கலாம். மலையக பகுதிகளில் அவதானிக்கப்பட்ட புகைமூட்டத்திற்கும் இந்தோனேசியா புகைமூட்டத்திற்கும் நேரடியாக சம்பந்தமில்லாமல் இருக்கலாம்.

எமது நாட்டிலுள்ள கட்டுப்படுத்தப்படாத தனியார் வெளிநாட்டுக் கம்பெனிகளின் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையாலும், நச்சுக் கழிவாலும் சூழல் வெகு வேகமாக மாசடைந்து வருகிறது.

குறிப்பாக தனியார் கம்பெனிகள் பெருந்தோட்டங்களை பொறுப்பெடுத்துப் பிறகு அதிகமான மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தோட்டப்பகுதியில் மண் வளத்தைப் பாதுகாப்பதற்குமான ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. இதனால் இலங்கையின் சூழலும் ஆபத்துக்குள்ளாகியே இருக்கிறது.

தனியார், தாராள திறந்த பொருளாதாரம் மனித குலத்திற்கு அடிப்படையான சூழலை பாதுகாப்பதில் கவலைப்படுவதில்லை. அவற்றுக்கு மனித இதயமும் இல்லை. மனித முகமும் இல்லை. மனித வாழ்வுக்கு எதிரான அதீத சுரண்டல், சூழல் மாசடைதல் என்பனவே அவற்றின் லட்சணங்களாகும்.

(5ம் பக்கத் தொடர்ச்சி...)

## பத்தனை ஸ்ரீபாத...

டும். ஸ்ரீபாத கல்லூரியை பாதுகாக்க வேண்டும்.

தற்போது வாளாவிருந்துவிட்டு பின்னர் ஐயோ உள்ளதும் போய்விட்டதே என அங்கலாய்ப்பதால் எவ்வித நன்மையும் விளையப் போவதில்லை.

**ஊவா மாகாண பெற்றோர்**
**சார்பாக**
**பெ.சண்முகம் பிள்ளை**
**பதுளை.**

(3ம் பக்கத் தொடர்...)

## உயிர்களை கொல்ல..

வழமையாகியுள்ளது. காரணம் அக்கோவிலுக்கு வந்து வணங்கி விட்டுச் சென்ற எந்த ஒரு இராணுவ வீரருக்கும் ஒன்றும் நடக்கவில்லை. எல்லோரும் உயிருடன் இருக்கின்றனராம். கோயிலுக்கு வராத ஒரே ஒரு இளைஞன் மட்டுமே போர்க்களத்தில் இறந்து விட்டானாம்.

இந்தப் பொடியன் பட்டாளத்தில் வேலை கிடைத்துவிட்டது என்ற சந்தோஷத்தில் வருகிறான். போர்க்களத்தில் செத்துவிடக் கூடாது என்று பெற்றோர்கள் வேண்டிக் கொள்கின்றனர். இதைவிட போர்க்களத்தில் மனித உயிர்களை கொல்வது பற்றியோ, யாரை கொல்லப் போகிறான் என்பது பற்றியோ அவனுக்கு அறிவு கிடையாது. அவனது பெற்றோர்களுக்கும் அவை பற்றிய அறிவு கிடையாது என்று அந்தப் பூசகர் தெரிவித்தார்.

## கொலைகளுக்கு எதிராக ....

(12ம் பக்கத் தொடர்...)

கொலைகளையும் கண்டித்து எழுதப்பட்டிருந்தன. இவ்விரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கும் இடதுசாரிக் கூட்டமைப்பில் அங்கம் பெறும் புதிய - ஜனநாயக கட்சி, நவசமசமாஜக் கட்சி தியச கல்வி வட்டம், மற்றும் தொழிற் சங்கங்கள், அமைப்புகள் ஆதரவு வழங்கி கலந்து கொண்டன. இவ் இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் குடாநாட்டிலிருந்து காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். பெற்றோர் உறவினர்கள் எனக் கலந்து கொண்ட அவர்கள் தமது பிள்ளைகளுக்கு நடந்த அவலங்கள், பற்றி கலந்துரையாடல்களின் போது எடுத்துரைத்தனர்.

இரண்டாவது நாள் இறுதி நிகழ்ச்சி 'வலயத்தில் நாம்' அமைப்பாளர் பிரிட்டோ தலைமையில் நடைபெற்றது. அங்கு புதிய - ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சிகா.செந்திவேல், நவசமசமாஜக் கட்சியின் அமைப்புச் செயலாளர் லீனஸ் ஜயத்திலக்கா, பௌத்தகுரு பற்றிக் பெர்னாண்டோ, மகேஸ்வரி வேலாயுதம் உட்பட மற்றும் சிலர் உரை நிகழ்த்தினர். இரண்டு சிங்கள வீதி நாடகங்களும், புதிய - ஜனநாயக கட்சியின் மலையக் குழுவின் சார்பான தமிழ் வீதி நாடகம் ஒன்றும் இடம் பெற்றன.

1ம் பக்கத் தொடர்ச்சி

## பேரினவாதப் ....

நிலங்கள் விவசாயிகளிடமிருந்து பல்தேசியக் கம்பனிகள் பறித்துக் கொள்வது பற்றியோ சிங்கள ஆணைக்குழு ஒரு வார்த்தையாவது கூறிக் கொள்ளவில்லை. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு கால பௌத்த கலாசாரம் பற்றி அளந்து நிற்கும் ஆணைக்கு இன்று அந்நிய கலாசாரத்தால் - பாலியல் துர்நடத்தைகளும், போதைவஸ்துப் பாவனையும் ஆபாச சஞ்சிகைகள் -சினிமாவில் சீரழிந்து நிற்பதையிட்டு கவலை கொள்ளவில்லை. பௌத்த தர்மத்தை உபதேசித்த கௌதம புத்தர் அன்பு, கருணை, கொல்லாமை பற்றியே வலியுறுத்தினார். ஆனால் உலகில் எங்கும் காணாதவாறு இலங்கையில் தான் யுத்தத்திற்கு பௌத்த துறவிகளில் பலர் அனுசாசனம் வழங்குகிறார்கள். பௌத்தத்தைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொள்ளும் அமைப்புகள் மதவெறி கக்கி யுத்தத்திற்குப் போர் சங்கு ஊதுகின்றன.

சிங்கள ஆணைக்குழு அறிக்கையை வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் போட வேண்டும் என அமைச்சர் மங்கள சமரவீரா கூறிய கூற்று சரியானதோர் கூற்றாகும். மேலும் அந்த அறிக்கையின் பின்னால் அரசியல் சதி இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் அமைச்சரின் கூற்றினால் எழுந்துள்ள எதிர்ப்பில் அரசாங்கமோ அன்றி ஏனைய அமைச்சர்களோ தமது ஒருமுகத் தன்மையை வெளிக் காட்டவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். இது பேரினவாதத்தை நேருக்கு நேர் முகம் கொடுப்பதில் உள்ள அச்சத்தை வெளிப்படுத்துகிறது. அத்துடன் சிங்கள ஆணைக்குழு அறிக்கையுடன் ஒத்துப்போகக் கூடிய பேரின ஆதரவு சக்திகள் அரசாங்கத்தினுள் இருந்து வருவதையும் காணமுடிகிறது. அதனாலேயே இவ் அறிக்கை வெளிவந்து சலசலப்பை ஏற்படுத்திய பின் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வடக்கு கிழக்குப் பிரிப்பிற்கான சர்வசன வாக்கெடுப்பு பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளார். இது பேரினவாதிகளைச் சாந்தப்படுத்தும் ஒரு செயலாகவே கொள்ள முடியும். இவ்வாறு படியிறங்கிப் படியிறங்கி இறுதியில் வெறும் கடதாசித் தீர்வாகவே அரசியல் தீர்வு இருக்கப் போகிறது.

இந்நிலைக்குப் பதிலாக அரசாங்கமும் ஜனாதிபதியும் அரைகுறைத் தீர்வை வைத்து பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் போக்கை கைவிட்டு உருப்படியானதும் தமிழ் முஸ்லிம் மலையக மக்களின் நியாயமான அபிலாஷைகளை உள்ளடக்கியதுமான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதனை ஆக்க பூர்வமானதாக்குவதற்கு யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடனும் ஏனைய தமிழர் அமைப்புகளுடனும் திறந்த மனதுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இதுவே சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கைக்கு உரிய மாற்று நடவடிக்கையாகும்.

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI புதிய பூமி


## தோ.தொழிலாளர்களின் வேலை நேரத்தை குறைத்தால் வாழ்க்கைத் தரம் உயருமாம்

தோட்டத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலங்களிலிருந்து ஆறு மணித்தியாலங்களாக குறைக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்று இ.தொ.கா. தலைவர் தொண்டமான் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் பற்றி தொழிலமைச்சில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. அவர்களின் மத்தியில் சிசு மரணங்கள், கர்ப்பிணி மரணங்கள் என்பன அதிகமாகும். அவர்களின் உணவு எவ்வகையிலும் நிறைவாக இல்லை. இவற்றுக்கு காரணம் அவர்களின் கடின உழைப்பும் குறைவான வருமானமுமே ஆகும்.

இந்நிலையை மாற்றுவதாயின் முதலில் அவர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். சராசரி வாழ்க்கையை நடத்த போதுமான சம்பளம் கிடைத்தாலேயே அவர்கள் ஓய்வாய் இருப்பது பற்றியும், விடுமுறையை அனுபவிப்பது பற்றியும் யோசிக்க முடியும். அந்நிலையிலேயே வேலை நேரம் குறைக்கப்படுவதை தொழிலாளர்கள் மனப்பூர்வமாக ஏற்கக் கூடியவர்களாக இருப்பர். இல்லாவிட்டால் வருமானத்துக்கு கூடிய நேரம் உழைக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

எனவே வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்பதை விட சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை தொண்டமான் முன்வைத்திருக்கலாம். வருமானம் இல்லாமை அல்லது வருமானம் குறைவாக இருப்பதற்கு பிரதான காரணமாகும் என்பதை அவர் அறியாதவரும் அல்ல.

ஆனால் வென்றெடுக்க கடினமான கோரிக்கைகளை முன்வைப்பதற்கு பின்நிற்பது மட்டுமன்றி போராட்டம் நடத்தியும் எதனையும் சாதிக்க முடியாத அளவிலேயே அவரது தொழிற்சங்கம் உட்பட எல்லா தொழிற்சங்கங்களும் இருக்கின்றன.

ஒருநாள் சம்பளத்தில் 8 ரூபாவை அதிகரித்து தரும்படி போராட்டம் நடத்தி ஒரு வருடத்துக்கு மேலாகிறது. இன்னும் அந்த சம்பள உயர்வு கூட வழங்கப்படவில்லை.

அண்மைய ஆய்வுகளின் படி 50 சதவீதத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நிரந்தரமான வேலையற்றவர்களாகவே இருக்கின்றனர். எல்லா தொழிலாளர் குடும்பங்களுக்கும் தோட்டத் தொழிலை விட ஏனைய வருமானம் தரக்கூடிய தொழில்களையும் செய்யக்கூடிய நிலையில் இல்லை.

தனியார் கம்பெனிகள் தோட்டங்களைப் பொறுப்பேற்றுப் பிறகு கிழமைக்கு சராசரியாக 3 அல்லது 4 நாட்களே வேலை வழங்கப்



படுகிறது.

ஒரு தொழிலாளர் குடும்பத்தை நம்பி வாழும் பிள்ளைகளின் முதியோர்களின் எண்ணிக்கை கிராமப்புற குடும்பங்களை விட அதிகமாவதால் ஒரு தொழிலாளர் குடும்பத்தின் பொருளாதார சுமை அதிகமாகும்.

சத்துள்ள நிறையான உணவை உண்ண முடியாததால் நோய்வாய்ப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகம். அதனால் வேலை நாட்களை இழப்பதுடன் நீண்டநாள் உயிர்வாழ முடியாதும் இருக்கின்றனர்.

## வடக்கு கிழக்கை உடைப்பது தான் அரசியல் தீர்வின் நோக்கம்!

## எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்க்கிறார் அமைச்சர் பீரிஸ்

அதிகாரப் பரவலாக்கல் அலகை பிரகடனம் செய்ததன் மூலம் பேரினவாத அடிப்படையிலிருந்து விலகி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பவில்லை என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை இரண்டு மூன்றாக துண்டாடுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் அக்கறையும், நிதானமும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட



வேண்டிய உரிமைகள் தொடர்பாக இல்லை என்பது மேலும் வெளிப்படையாகியுள்ளது.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழும் வடக்கு கிழக்கு பகுதியை ஒரே பிராந்தியமாக பார்க்க விரும்பாத பேரினவாத நிலைப்பாட்டை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளியிட்டுள்ள விபரங்களின் படி வடமாகாணத்துடன் திருகோணமலை மாவட்டமும், மட்டக்களப்பு மாவட்டமும் இணைக்கப்பட வேண்டுமா என்பது பற்றி இரண்டு மாவட்டங்களிலும் தனித்தனி அபிப்பிராய வாக்கெடுப்புகள் நடத்தப்படவுள்ளன. அந்த இரண்டு மாவட்டங்களும் வடக்குடன் இணைக்கப்படுவதற்கு ஆதரவாக அபிப்பிராய வாக்கெடுப்பு வெற்றி பெற்றால் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் பகுதி முஸ்லீம்களுக்கு தனி அதிகார அலகு தேவைதானா என்பது பற்றி இன்னொரு அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறும். அதன் பிறகு அம்பாறை மாவட்டத்திலுள்ள அம்பாறை தேர்தல் தொகுதி, ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட வேண்டுமா என்பதற்கும் இன்னொரு அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறும்.

சிங்கள கமிஷனின் இடைக்கால அறிக்கையை கண்டு பயந்து மேற்படி யோசனைகள் வெளியிடப்பட்டதாக பலரும் பேசிக் கொண்டாலும் இந்த அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே இவ்வாறான நிலைப்பாட்டிலேயே இருந்துள்ளது என்பது தெரியவருகிறது.

அதாவது சிங்கள கமிஷன் அறிக்கையை கண்டுப் பயந்தன்றி, வடக்கு கிழக்கை இணைக்கக் கூடாது என்ற அடிப்படையில் இனப்பிரச்சினையை அணுகி வந்துள்ளது என்பது தெரியவருகிறது.

வடக்கு கிழக்கு இரண்டு மூன்றாக துண்டாடப்படும் இந்த யோசனைகளால் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே மேலும் பிளவையும் பகை முரண்பாடுகளையுமே ஏற்படுத்தும்.

இந்த யோசனைகளின்படி திருகோணமலை மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களுக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென்றும், முஸ்லிம் அலகிற்கு எதிராக தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாக்களிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் விரும்புகிறது. இந்த விருப்பம் இன ஒற்றுமைக்கான விருப்பமோ, தமிழ் மக்களினதோ, முஸ்லிம் மக்களினதோ உரிமைகளை வழங்குவதற்கான விருப்பமன்று. தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை மறுக்கும் தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்களிடையே மோதல்களை ஊக்குவிக்கும் நடவடிக்கை ஆகும்.

கடந்த காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணம் பலவிதமான நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஒரே பிராந்தியமாகவே கணிக்கப்பட்டுள்ளது. அதைவிட அது தமிழ் தேசிய இனத்தின் தாயகம் அல்லது பாரம்பரிய பிரதேசமாகும். அப்பிரதேசத்தை துண்டாடுவதற்கு பேரினவாத பயத்தையன்றி வேறெந்த காரணத்தையும் முன்வைக்க முடியாது.

எனவே இணைந்த வடக்கு கிழக்கு பிராந்திய சுயாட்சியை உறுதி செய்வதுடன் அப்பகுதியில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் சுயாட்சி உள் அமைப்புகளை ஏற்படுத்துவதே பொருத்தமானதாகும். அந்த விதத்தில் மலையக மக்களுக்கும் சுயாட்சி உள்ளமைப்புகளையும் ஏற்படுத்த முடியும்.

இவ்வாறான அணுகுமுறை இல்லாவிடின் வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை. அது சாத்தியமில்லாவிடின் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் உறுதி செய்யவும் முடியாது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முடியாது. சமாதானத்தை நிலைநாட்டவும் முடியாது. இந்த அரசாங்கத்தின் இறுதிக் காலம் வரை யுத்தத்தை அரசியல் தீர்வின் பெயரால் நடாத்திச் செல்வதையே அரசாங்கம் தொடரப் போகிறது.

## கதிர்காமநாதனின் கைதும் விடுதலையும்



புலிகள் இயக்கத்திற்கு உதவுவர் என்ற குற்றச் சாட்டில் சந்தேகத்தின் பேரில் கடந்த 13.09.97 அன்று புதிய ஜனநாயக கட்சியின் வடபிரதேசச் செயலாளர் தோழர் கா.கதிர்காமநாதன் சி.டி.பி. பொலிசாரினால் கொழும்பில் கைது செய்யப்பட்டார். ஆறு நாட்கள் ஆறாவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார். இக் கைது பற்றி கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேலிடமும் சி.டி.பி. பொலிசார் வாக்கு மூலம் ஒன்றினைப் பெற்றனர். அத்துடன் ஏனைய இடதுசாரிக் கட்சிகள், அமைப்புகளும் அதன் தலைவர்களும் மேற்படி வடபிரதேச செயலாளரின் கைது பற்றிய தமது ஆட்சேபத்தை தெரிவித்து அவரை விடுதலை செய்யும்படி கோரியிருந்தனர். ஆறு நாட்களின் பின் 18.09.97 அன்று கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் தோழர் கதிர்காமநாதன் கொண்டு வரப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

## கொலைகளுக்கு எதிராக வாழ்க்கைக்கு உயிர் கொடுப்போம்!

ஒக்ரோபர் 2 ம், 3 ம் திகதிகளில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக இரண்டு முழு நாளும் மக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கொலைகளுக்கு எதிராக வாழ்க்கைக்கு உயிர் கொடுப்போம் என்பதே அந் நிகழ்ச்சிகளின் மையமாகும். 'வலயத்தில் நாம்' அமைப்பினரே இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தனர். கலந்துரையாடல்கள், சொற்பொழிவுகள், வீதி நாடகங்கள் என்பவை இடம் பெற்றன. காட்சிப் படங்கள், பதாகைகள், சுலோக அட்டைகள் என்பன சகல வகைக்

தொடர்ச்சி பக்கம் 11இல்